1981 முதல்

# பிற்பகல்

தமிழ் நாளிதழ்

வெளியூர்
24.5.2023
புதன்கிழமை

கோயம்புத்தூர்
23.5.2023
செவ்வாய்க்கிழமை

RNI NO. 53622/91
CB/011/2021-23
Regd. No. TN/WR/CB/011/WPP/2018-20

தேவன்
பூமியனைத்திற்கும் ராஜா.
சங். 47:7

ஸ்தாபக ஆசிரியர்: A.E.சாலமன் அப்பாதுரை. ஆசிரியர்: M.N.சுதன் அப்பாதுரை. இதழ்: 43 — நாள்: 45. பக்கங்கள் 6. ரூ 7.00





முதல்வரை விமர்சித்த ஆசிரியர் சஸ்பெண்டு பக்கம் 2





மோடி மந்திரவாதி: சிவசேனா தலைவர் கிண்டல் பக்கம் 3





பெட்ரோல் பங்கில் செல்போன் வெடித்து இளம்பெண் பலி பக்கம் 4


## ‘தொழில் முதலீட்டாளர்களை அழைக்கச் செல்கிறேன்’ என சென்னை விமானநிலையத்தில் முதல்வர் பேட்டி:

# சிங்கப்பூர், ஜப்பான் புறப்பட்டார் ஸ்டாலின்

சென்னை, மே 23

சிங்கப்பூர் பயணத்தின்போது புதிய தொழில் ஒப்பந்தங்கள் கையெழுத்தாக உள்ளன என முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

தொழில் வளர்ச்சிக்கு தமிழக அரசு மிகுந்த முக்கியத்துவம் கொடுத்து வருகிறது. அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் உலக முதலீட்டாளர்கள் மாநாட்டை நடத்த அரசு திட்டமிட்டு உள்ளது.

இதன்படி தமிழ் நாட்டுக்கு அதிக தொழில் முதலீடுகளை ஈர்ப்பதற்காக, முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் 9 நாள் பயணமாக சிங்கப்பூர், ஜப்பான் ஆகிய நாடுகளுக்கு செல்கிறார். இதற்காக சென்னை விமான நிலையத்தில் இருந்து இன்று (செவ்வாய்க்கிழமை) காலை 11.25 மணிக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் சிங்கப்பூர் புறப்பட்டுச் சென்றார். அங்கு 2 நாள் நடைபெறும் நிகழ்ச்சிகளில் பங்கேற்கிறார்.

தொடர்ந்து, 25ந்தேதி ஜப்பான் செல்கிறார். அங்கு 7 நாட்கள் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்கும் முதல்வர் மு.க.ஸ்டாலின் வரும் 31ந்தேதி பிற்பகல் சென்னை திரும்புகிறார்.

இது தொடர்பாக, தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது:

தமிழ்நாட்டிற்கு முதலீடுகள் மற்றும் புதிய தொழில்நுட்பங்களை கொண்டு வரவும், வரும் ஜனவரி 2024ல் நடைபெறவுள்ள உலக முதலீட்டாளர்கள் மாநாட்டுக்கு அழைப்பு விடுக்கவும் அரசு முறைப் பயணமாக, சிங்கப்பூர் மற்றும் ஜப்பான் நாடுகளுக்கு முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் பயணம் மேற் கொண்டுள்ளார்.

முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலினுடன் தொழில் துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா மற்றும் அரசு உயர் அதிகாரிகள் உடன் சென்றுள்ளனர்.

இன்று சிங்கப்பூருக்கு சென்று, அந்நாட்டின் போக்குவரத்து தொழில் மற்றும் வர்த்தகத் துறை மந்திரி ஈஸ்வரனையும், உள் துறை மற்றும் சட்டத்துறை மந்திரி கே.சண்முகத்தையும் மற்றும் அந்நாட்டின் முன்னணி தொழில் நிறுவனங்களான டெமாசெக், செம்கார்ப் மற்றும் கேப்பிட்டலாண்டு இன்வெஸ்மன்ட் அதிபர்கள், முதன்மைச் செயல் அலுவலர்களையும் சந்திக்க உள்ளார்கள். இன்று மாலை நடைபெற உள்ள முதலீட்டாளர்கள் மாநாட்டின் போது, தமிழ்நாடு வழிகாட்டி நிறுவனம், தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் (சிப்காட்) பேம் டி.என்., டான்சிம் மற்றும் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் ஆகியவை சிங்கப்பூர் நாட்டைச் சேர்ந்த பல்கலைக்கழகமான எஸ்.யு.டி.டி., சிங்கப்பூர் இந்தியா கூட்டாண்மை அமைப்பு மற்றும் சிங்கப்பூர் இந்தியா தொழில் வர்த்தக கூட்டமைப்பு ஆகியவற்றுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட உள்ளன. மேலும் சிங்கப் பூர் வாழ் தமிழர்கள் ஏற்பாடு செய்துள்ள கலைநிகழ்ச்சியிலும் கலந்துகொள்ள உள்ளார்கள். இந்த உறவை மேலும் மேம்படுத்தும் வகையில்தான், முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் முதலீட்டுக் குழுவுக்கு தலைமை தாங்கி ஜப்பான் செல்கிறார்.

அங்கு முன்னணி தொழில்துறைத் தலைவர்களையும், அரசு அதிகாரிகளையும் சந்தித்து, உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் பங்கேற்று, தமிழ்நாட்டில் முதலீடு மேற்கொள்ள வருமாறு முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் அழைப்பு விடுக்க இருக்கிறார். ஜப்பான் நாட்டில், ஒரு முதலீட்டு ஊக்குவிப்பு மாநாடும் நடைபெற உள்ளது. பல்வேறு நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையொப்பமிடப்பட உள்ளன.

ஒசாகாவில், ஜப்பான் வெளியுறவு வர்த்தக நிறுவனமான, ஜெட்ரோ நிறுவனத்துடன் இணைந்து, அங்கு நடைபெற உள்ள முதலீட்டாளர்கள் மாநாட்டில் முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் கலந்து கொள்ள உள்ளார். மேலும், முக்கிய நிறுவனங்களின் தலைமை அதிகாரிகளுடன் சந்தித்து தமிழ்நாட்டில் முதலீடுகள் மேற்கொள்வதற்கு அழைப்பு விடுக்க உள்ளார். அதனைத் தொடர்ந்து, ஒசாகா வாழ் இந்திய சமூகத்தினர் அளிக்கும் வரவேற்பு நிகழ்ச்சியிலும் கலந்துகொள்ள உள்ளார்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.



முன்னதாக இன்று காலை சென்னை மெரினாவில் உள்ள அண்ணா, கலைஞர் நினைவிடங்களில் முதல்வர் மு.க.ஸ்டாலின் மரியாதை செலுத்தினார். பின்னர் சிங்கப்பூர் செல்வதற்காக சென்னை விமான நிலையத்தை முதலமைச்சர் வந்தடைந்தார்.


முதல்வரின் வெளிநாட்டு பயணம் வெற்றி பெற அமைச்சர்கள், அரசு அலுவலர்கள் வாழ்த்து தெரிவித்தனர். மேயர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி செய்திகள் பிரதிநிதிகளும் முதலமைச்சருக்கு வாழ்த்து தெரிவித்தனர். பின்னர் செய்தியாளர்களை சந்தித்து பேசிய முதல்வர் மு.க.ஸ்டாலின் கூறியதாவது: அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் பங்கேற்க அழைப்பு விடுப்பதற்காக சிங்கப்பூர், ஜப்பான் செல்கிறேன். ஜனவரி மாதம் சென்னையில் உலக முதலீட்டாளர்கள் மாநாடு நடைபெறவுள்ளது. முதலீடுகளை ஈர்க்க 9 நாள் பயணமாக சிங்கப்பூர், ஜப்பான் உள்ளிட்ட நாடுகளுக்கு செல்கிறேன்.

அங்கு தொழிலதிபர்களை சந்திக்கவுள்ளேன். வெளிநாடு பயணத்தின் போது புதிய தொழில் ஒப்பந்தங்கள் கையெழுத்தாகவுள்ளன. இந்தப் பயணம் வெற்றிகரமாக முடியும்; அதிக முதலீடுகள் தமிழகத்திற்கு வரும். கடந்த முறை துபாய் பயணத்தின்போது கிடைக்கப்பெற்ற ரூ.6100 கோடி முதலீடுகள் மூலம் 15,000 வேலை வாய்ப்புகள் உருவாகின. 6 நிறுவனங்களில் 15,000 வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டது. திமுக ஆட்சி பொறுப்பேற்ற 2 ஆண்டுகளில் ரூ.2.95 லட்சம் கோடி முதலீடுகள் உறுதிசெய்யப்பட்டுள்ளன. 2 ஆண்டுகளில் 4.12 லட்சம் பேருக்கு வேலை வாய்ப்புகள் உருவாக்கப் பட்டுள்ளன. இவ்வாறு அவர் கூறினார்.

### ஐதராபாத்தில் இருந்து உடல் சென்னை வந்தது:

## ‘சரத்பாபு நல்ல நண்பர், சிறந்த மனிதர்’: நேரில் அஞ்சலி செலுத்திய ரஜினி நெகிழ்ச்சி





சென்னை, மே 23

மறைந்த நடிகர் சரத்பாபுவின் உடலுக்கு நடிகர் ரஜினிகாந்த் இன்று (மே 23) நேரில் சென்று அஞ்சலி செலுத்தினார். அவர்கள் இருவரும் திரையிலும், நிஜ வாழ்விலும் நல்ல நண்பர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. முள்ளும் மலரும், நெற்றிக்கண், வேலைக்காரன், முத்து, அண்ணாமலை போன்ற படங்களில் இருவரும் இணைந்து நடித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

நடிகர் சரத்பாபு கடந்த சில நாட்களாகவே உடல்நலக்குறைவு காரணமாக ஹைதராபாத்தில் ஏஜிஜி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், நேற்று சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்தார். இவருடைய திடீர் மறைவு திரைத்துறையில் சோகத்தையும், அதிர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில் இன்று காலை அவரது உடல் ஹைதராபாத்தில் இருந்து ஆம்புலன்ஸ் மூலம் சென்னை தியாகராய நகரில் உள்ள அவரது இல்லத்திற்குக் கொண்டு வரப்பட்டது. அங்கே திரைப் பிரபலங்கள், பொது மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ள அவரது உடல் பிற்பகலில் அடக்கம் செய்யப்படுகிறது.

இந்நிலையில் நடிகர் ரஜினிகாந்த் நேரில் சென்று சரத்பாபுவுக்கு அஞ்சலி செலுத்தினார். பின்னர் செய்தியாளர்களை சந்தித்த ரஜினிகாந்த், “நான் நடிகர் ஆவதற்கு முன்பிருந்தே சரத்பாபுவை எனக்குத் தெரியும்.

நாங்கள் இருவரும் நல்ல நண்பர்கள். மிகவும் அருமையான மனிதர். எப்போதும் சிரித்த முகத்துடன் இருப்பார். அவர் கோபமாக இருந்து நான் பார்த்தது இல்லை. அவருடன் இணைந்து நடித்த படங்கள் அனைத்துமே ஹிட். முள்ளும் மலரும் படத்தில் தொடங்கி வேலைக்காரன், முத்து, அண்ணாமலை எல்லாமே ஹிட் தான்.

என் மீது அளவு கடந்த அன்பு வைத்திருந்தவர். ‘சிகரெட்ட நிறுத்து. உடம்ப கெடுத்துக் கொள்ள வேண்டாம். ரொம்ப நாள் வாழணும்’ என என்னிடம் சொல்வார். நான் சிகரெட் பிடித்தாலும் அதை தூக்கிப் போட்டு விடுவார். அதனால் அவர் முன்பு அதை நான் செய்யவே மாட்டேன். ரொம்ப நல்ல மனிதர்” எனத் தெரிவித்தார்.

## சென்னை உயர்நீதிமன்றத்தில் இன்று மேலும் 4 நீதிபதிகள் பதவியேற்றனர்

சென்னை, மே 23

மாவட்ட நீதிபதிகள் 4 பேர் சென்னை உயர்நீதிமன்ற கூடுதல் நீதிபதிகளாக இன்று பதவியேற்றுள்ளனர்.

சென்னை உயர் நீதிமன்றத்திற்கு நான்கு கூடுதல் நீதிபதிகளை நியமித்து குடியரசுத் தலைவர் உத்தரவிட்டுள்ளார். மாவட்ட நீதிபதி அந்தஸ்தில் உள்ள ஆர்.சக்திவேல், பி.தனபால், சின்னசாமி குமரப்பன், கே.ராஜசேகர் ஆகியோரை சென்னை உயர் நீதிமன்ற நீதிபதிகளாக நியமிக்க கடந்த மார்ச் மாதம் கொலிஜியம் பரிந்துரை செய்திருந்தது.

உச்ச நீதிமன்ற கொலீஜியத்தின் பரிந்துரைக்கு ஒன்றிய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இதையடுத்து, மாவட்ட நீதிபதிகளாக பதவி வகித்து வரும் உயர் நீதிமன்ற தலைமை பதிவாளர் பி.தனபால், ஏற்கனவே தலைமை பதிவாளர்களாக பணியாற்றிய சக்திவேல், சி.குமரப்பன், தமிழ்நாடு சட்ட பணிகள் ஆணைக்குழு உறுப்பினர் செயலராக பணியாற்றிய ராஜசேகர் ஆகிய இந்த நான்கு பேரை சென்னை உயர்நீதிமன்ற கூடுதல் நீதிபதியாக நியமிக்க ஜனாதிபதி திரௌபதி முர்மு ஒப்புதல் அளித்திருந்தார்.

இதன் மூலம் சென்னை உயர் நீதிமன்ற நீதிபதிகள் எண்ணிக்கை 64 ஆக உயர்ந்தது. நீதிபதிகள் தனபால், சக்திவேல், குமரப்பன், ராஜசேகர் ஆகியோர் ஐகோர்ட் நீதிபதிகளாக பதவி ஏற்றனர். 4 பேருக்கும் உயர்நீதிமன்ற பொறுப்பு தலைமை நீதிபதி டி.ராஜா பதவிப்பிரமாணம் செய்து வைத்தார். சென்னை உயர்நீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கை 64ஆக உயர்ந்துள்ளது.

புதிய நீதிபதி கே.ராஜசேகர் தற்போது கோவை மாவட்ட முதன்மை நீதிபதியாக பணியாற்றி வருகிறார்.


VELALAR COLLEGE OF ENGINEERING AND TECHNOLOGY
(AUTONOMOUS)
PERUNDURAI ROAD, THINDAL, ERODE - 638 012.
Ph : 0424 - 2244201, 02, 03, 04, 05 Mob : 99429 07725, 94871 49205
Counselling Code : 2723
ADMISSION OPEN 2023 - 24

UNDER GRADUATE (B.E./B.Tech.)
Artificial Intelligence & Data Science 99407 04014
Bio-Medical Engineering 99429 53419
Civil Engineering 94427 17034
Computer Science and Engineering 98946 51159
Electrical & Electronics Engineering 94439 48051
Electronics & Communication Engg. 96590 03272
Mechanical Engineering 94435 63481
Medical Electronics 98429 22355
Information Technology 99945 56999

POST GRADUATE (M.E./M.Tech.)
Applied Electronics
Bio-Medical Engineering
Computer Science and Engineering
Master of Business Administration (MBA)

RESEARCH (Ph.D.)
Electrical & Electronics Engineering
Electronics & Communication Engineering
Physics

Autonomous Institution
Accredited by NAAC with ‘A+’ Grade & Accredited by NBA
COURSES ACCREDITED BY NATIONAL BOARD OF ACCREDITATION
AUTONOMOUS STATUS

ALL INDIA RANKINGS
India Today Ranking
LOWEST FEES STRUCTURE 10th POSITION IN ALL INDIA LEVEL
PLACEMENT (CAREER PROGRESSION AND PLACEMENT) 5th POSITION IN STATE LEVEL
DATAQUEST TOP T-SCHOOLS RANKING OF INDIA'S TOP ENGINEERING COLLEGES 5th POSITION IN STATE LEVEL (GOVT. & PRIVATE)
THE WEEK RANKING BEST PRIVATE ENGINEERING COLLEGE 9th POSITION IN STATE LEVEL

✧ 125+ Recruiters
✧ 50+ IT Software Service / Product Companies
✧ 75+ Core Companies
www.velalarengg.ac.in

ADMISSION CONTACT
Mr. N. PERIASAMY, MBA
Administrative Manager
Mobile : 98427 34934
94425 77925 73734 63663
96558 55778 99659 57778
98946 24874 98424 39781
98421 92122 99429 07725



நீலகிரி மாவட்டம் உலிக்கல் பேரூராட்சிக்குட்பட்ட சேலாஸ் பகுதியில் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் அமைக்கப்பட்டிருந்த தமிழக அரசின் சாதனை விளக்கப்புகைப்படக்கண்காட்சியினை ஏராளாமான பொதுமக்கள் பார்வையிட்டு அரசின் சாதனைகள் மற்றும் திட்டங்கள் குறித்து தெரிந்து கொண்டனர்.

# சித்த ராமையாவை விமர்சித்த கன்னட ஆசிரியர் சஸ்பெண்டு



பெங்களூரு, மே 23

கர்நாடகாவின் சித்ரதுர்கா மாவட்டத்தில் அரசு நடத்தும் கீழ்நிலைப் பள்ளியின் ஆசிரியர் ஒருவர், முதல்வர் சித்தராமையா ஆட்சியில் மாநிலத்தின் கடன் எப்போதும் உயர்ந்து வருவதால் இலவசங்களை அறிவிக்கலாம் என்று பேஸ்புக்கில் எழுதியதால் இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

ஓசதுர்கா தாலுகாவைச் சேர்ந்த சாந்த மூர்த்தி என்பவர் இந்தப் பதிவை பதிவேற்றியிருந்தார். அதில் முதல்வர்களின் கீழ் பொதுக்கடன் என்ற தலைப்பில் தொகை ஒன்றையும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

இந்த நிலையில், கர்நாடகா சிவில் சர்வீசஸ் (நடத்தை) விதிகள் 1966ஐ மீறியதாக மூர்த்தி சஸ்பெண்டு செய்யப்பட்டார். தொடர்ந்து, இது குறித்து விசாரணை நடத்த பள்ளிக் கல்வித்துறை உத்தரவிட்டுள்ளது.

புதிய முதலமைச்சராக சித்தராமையா பதவியேற்ற நாளன்றும், காங்கிரஸின் தேர்தல் அறிக்கையில் கூறப்பட்ட 5 பெரிய வாக்குறுதிகளை நிறைவேற்ற அவரது அரசு முடிவு செய்த பிறகும் இந்தப் பதிவு பதிவேற்றப்பட்டது.

சித்தராமையாவை விமர்சித்த பாஜக ஐடி பிரிவு தலைவர் அமித் மாளவியா, "கர்நாடகாவில் முதல்வர் சித்தராமையாவை அவரது கொள்கைகளுக்காக விமர்சித்து FB பதிவு செய்ததற்காக கர்நாடகாவில் அரசு நடத்தும் கீழ்நிலைப் பள்ளியின் ஆசிரியர் இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

அவர் அரசாங்கத்திற்கு தலைமை தாங்கும் போது மாநிலத்தின் கடன் எப்பொழுதும் உயர்ந்து வருவதால் பிந்தையவர்கள் பல இலவசங்களை உறுதியளிக்க முடியும் என்பதை அவர் சுட்டிக்காட்டினார். உண்மை காயப்படுத்துகிறதா?" எனக் கேட்டுள்ளார்.

## எவரெஸ்ட் சிகரம் ஏறி சாதனை படைத்த மேலும் ஒரு தமிழர்



சென்னை, மே 23

உலகின் மிக உயரமான எவரெஸ்ட் சிகரத்தில் ஏறி, சென்னையை அடுத்த கோவளத்தை சேர்ந்த ராஜசேகர் என்பவர் சாதனை படைத்துள்ளார். இதன்மூலம் இந்த சாதனையை படைத்த 2வது தமிழர் என்ற பெருமையை பெற்றுள்ளார். மே 19 அன்று வரலாறு சாதனையை முடித்த ராஜசேகர், திங்கள்கிழமை சென்னை திரும்பினார்.

கோவளத்தைச் சேர்ந்த 27 வயதான இவர், முதலில் எரிய சிவகுமாருக்குப் பிறகு 8,848 மீட்டர் உயரமுள்ள சிகரத்தை ஏறிய தமிழ்நாட்டின் இரண்டாவது இடத்தில் உள்ளார்.

கடந்த 2022 அக்டோபரில் தனது பயிற்சியைத் தொடங்கிய அவர், 5,000 மீட்டர் உயரமுள்ள சிகரங்களில் ஏறத் தொடங்கினார். பின்னர், படிப்படியாக உயரம் ஆயிரம் மீட்டர் அதிகரித்து தற்போது சாதனை படைத்துள்ளார்.

# நூற்பாலைகளுக்கு வரலாறு காணாத நெருக்கடி – உற்பத்தியை 50% ஆக குறைப்பு

கோவை, மே 23

வரலாறு காணாத தொழில் நெருக்கடி நிலையால் நூற்பாலைகள் நிலைதடுமாறுகின்றன. இதனால், உற்பத்தியை 50% குறைக்கப்போவதாக நூற்பாலைகள் சங்கத்தினர் அறிவித்துள்ளனர்.

கோவையில் நூற்பாலைகள் உற்பத்தியை 50 சதவீதமாக குறைக்க திட்டமிட்டுள்ளன. சிறுகுறு நூற்பாலைகள் கூட்டமைப்பின் செயலாளர் ஜெகதீஷ் நிருபர்களிடம் கூறியதாவது:

"நாட்டிலுள்ள தொழில் துறைகளில், குறைந்த முதலீட்டில் அதிக வேலைவாய்ப்பை தருவது ஜவுளித்தொழில் துறை என்றால் அது மிகையல்ல. படித்த பட்டதாரிகளில் ஆரம்பித்து பாமரன் கூலி தொழிலாளி வரை அனைத்து வர்க்கத்தையும் அரவணைக்கும் தொழில் ஜவுளி தொழில். அப்படிப்பட்ட தொழிலை அரவணைக்க அரசாங்கங்கள் தவறிவிட்டதா என்ற கேள்வி எழுப்பும் வகையில் ஜவுளித்துறை கடும் தொழில் நெருக்கடிக்கு தள்ளப்பட்டிருக்கின்றன.

அதில் முதன்மையான இடம் வகிப்பது ஜவுளித்தொழிலின் தாய் தொழிலான நூற்பாலைகள். நாட்டில் இயங்குகின்ற நூற்பாலைகளில் 50% நூற்பாலைகள் தமிழ்நாட்டில் இயங்குகின்றன.

பருத்தியிலிருந்து நூல் தயாரிக்கும் நூற்பாலைகள் கழிவு பஞ்சிலிருந்து நூல் தயாரிக்கும் ஓபன் எண்ட் ஸ்பின்னிங் மில்கள், ரீசைக்கில் மில்கள் என 2,000க்கும் மேற்பட்ட மில்கள் இயங்கி வருகின்றன.

இந்த நூற்பாலைகள் மூலமாக நேரடியாகவும் மறைமுகமாகவும் 15 லட்சம் குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. இந்த நிலையில் ஜவுளித்தொழிலில் கடுமையான நெருக்கடி ஏற்பட்டிருப்பதனால் லட்சக்கணக்கான குடும்பங்கள் மற்றும் ஜவுளி நூற்பாலைகளின் எதிர்காலம் என்னவாகும் என கேள்விக்குள்ளாக்கப்பட்டு இருக்கின்றன.

உலக அசாதாரண பொருளாதார சூழ்நிலையால் வெளிநாடு இறக்குமதியால் நூற்பாலைகள் நட்டத்தில் இயங்குவதாக தெரிவித்திருக்கின்றனர். குறிப்பாக உற்பத்தி செய்யப்படும் நூல்களை கிலோவுக்கு 20 முதல் 25 ரூபாய் வரை நட்டத்திற்கு விற்கப்படும் நிலைக்கு தள்ளப்பட்டு இருக்கின்றனர்.

வருடத்தில் 365 நாட்களும் மூன்று ஷிப்ட் என்ற அடிப்படையில் இயங்கி வந்த நூற்பாலைகள் தற்போது 50 சதவீதத்திற்கும் குறைவான வேலை வாய்ப்பினை தந்து வருகின்றன.

பங்களாதேஷ், வியட்நாம், சீனா போன்ற போட்டி நாடுகள் நூல்களை ஏற்றுமதி செய்திருந்த நிலையில், தற் போது உள்நாட்டிலேயே அவர்கள் உற்பத்தி செய்து அங்குள்ள ஆடை தயாரிப்பு நிறுவனங்களுக்கு வர்த்தகம் செய்து வருகின்றனர்.

இந்த நிலையில் இந்தியாவிலிருந்து ஏற்றுமதி இது போன்ற நாடுகளுக்கு கணிசமாக குறைந்திருக்கும் நிலையில், போட்டி நாடுகள் தற்போது இறக்குமதியிலும் கால் பதிக்க ஆரம்பித்து இருக்கின்றனர். இதனால் உள்நாட்டு நூல் உற்பத்தி போதுமான வர்த்தகம் இன்றி தவிக்கின்றது.

இந்த நிலையில் வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்படுகின்ற நூல்களின் விலை இந்தியாவில் கிடைக்கின்ற சந்தை விலை குறைவாக இருப்பதனால் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படுகின்ற நூல்கள் விற்பனை மந்தமாகியிருக்கின்றன. இதனால் உற்பத்தி செய்யப்படுகின்ற நூல்களை நட்டத்தில் விற்கின்றனர்.

இந்த நிலையில் நூற்பாலைகள் சங்கத்தினர் சந்திக்கும் சவால்களை அடுக்கி அதற்கான தீர்வை எதிர் நோக்கியிருக்கின்றனர். கடந்த கொரோனா பேரிடரின் பொழுது நெருக்கடியில் இருந்த தொழில் முனைவோருக்கு ஒன்றிய அரசாங்கத்தின் முன்னெடுப்பில் வங்கிகள் தந்த கடன்களை தற்பொழுது வட்டியுடன் செலுத்தி வருகின்றனர்.

பொருளாதார நெருக்கடியில் தத்தளிக்கும் நிலைக்கு தள்ளப்பட்டிருப்பதனால், கொரோனா பேரிடர் காலத்தில் பெற்ற கடனை திருப்பி செலுத்த 6 மாதத்திற்கு அவகாசம் கோருகின்றனர். நூற்பாலைகளுக்கான கடன் வட்டி சதவிகிதம் 7ல் இருந்து 11 ஆக உயர்ந்த நிலையில், மீண்டும் 7% ஆக குறைக்க நூற்பாலை தொழில் முனைவோர் ஒன்றிய அமைச்சகங்களுக்கு நூற் பாலை சங்கத்தினர் கோரி இருக்கின்றனர்.

இதேபோன்று தமிழ்நாடு அரசாங்கமும் உயர்த்திய மின் கட்டணத்தை உடனடியாக திரும்பப் பெறவும் வலியுறுத்தி இருக்கின்றனர். பொருளாதார நெருக்கடியில் தத்தளிக்கும் நூற்பாலைகளின் கோரிக்கையை உடனடியாக நிறைவேற்றி தொழிலை மீட்க வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

இந்த நிலையில் நட்டத்தில் இயங்குகின்ற நூற்பாலைகள் 50 % உற்பத்தியை குறைக்க முடிவெடுத்து அறிவித்தனர் . இதனால் நாள்தோறும் 150 முதல் 200 கோடி வர்த்தகம் பாதிக்கின்ற நிலை ஏற்பட்டிருக்கின்றன. எனவே வர்த்தகம், தொழிலாளர் வாழ்வாதாரம், நூற்பாலைகள் தொழில் நட்டத்தினை கருதி உடனடியாக ஒன்றிய மாநில அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே எதிர்பார்ப்பாக உள்ளது.

## கடும் எதிர்ப்புக்கு, தடைக்கும் மத்தியில் 'தி கேரளா ஸ்டோரி' திரைப்படம் 200 கோடி ரூபாய் வசூலித்து சாதனை




மும்பை, மே 23

பெரும் சர்ச்சைகளுக்கு மத்தியில் வெளியாகி 'தி கேரளா ஸ்டோரி ' திரைப்படம் வசூலில் பல கோடி ரூபாய்களை அள்ளி வருகிறது.

சர்ச்சைகள் முதல் தடைகள் வரை அனைத்தையும் தாண்டி திரையரங்குகளில் ஓடிக்கொண்டிருக்கும் 'தி கேரளா ஸ்டோரி' திரைப்படம் ரூ.200 கோடி கிளப்பில் இணைந்துள்ளது. சுதிப்தோ சென் இயக்கியுள்ள இப்படத்தில் அதா ஷர்மா, சித்தி இத்னானி ஆகியோர் நாயகியாக நடித்துள்ளனர்.

தமிழ்நாடு, கேரளா, மேற்கு வங்கத்தில் இப்படம் நிறுத்திவைக்கப்பட்டிருக்கும் நிலையிலும், வசூலில் சக்கை போடு போட்டு வருகிறது. நேற்று வரை இந்த திரைப்படம் ரூ.198.97 கோடி வசூலித்த நிலையில், இன்று ரூ.200 கோடி வசூல் செய்ததாக தகவல் வெளியாகியுள்ளது.

கடும் சர்ச்சை மற்றும் எதிர்ப்புக்கும் மத்தியில் கடந்த 5ம் தேதி தி கேரளா ஸ்டோரி எனும் பாலிவுட் திரைப்படமானது ஹிந்தி, தமிழ், தெலுங்கு , மலையாளம், கன்னடம் என பல்வேறு மொழிகளில் வெளியாகி 'தி கேரளா ஸ்டோரி' திரைப்படம் நாடு முழுக்க பெரும் பரபரப்பைக் கிளப்பியது.

இந்த திரைப்படத்தில் இஸ்லாமியர்களை தவறாக சித்தரித்துள்ளதாக கூறி, இஸ்லாமிய அமைப்புகள் மற்றும் பிரபல அரசியல் கட்சிகள் எதிர்ப்பு தெரிவித்தனர். அந்தவகையில், தி கேரளா ஸ்டோரி படத்திற்கு ஒரு சில மாநிலங்கள் வரிவிலக்கை அறிவித்திருந்தன. அதேநேரம் தமிழ்நாடு, கேரளா, மேற்கு வங்கம் உள்ளிட்ட வேறு சில மாநிலங்கள் இந்தப் படத்தை திரையிட தடையும் விதித்திருந்தது.

சர்ச்சைகளுக்கு மத்தியில் தி கேரளா ஸ்டோரி படம் மே 5 அன்று வெளியிடப்பட்டது.மே 16 அன்று, படம் ரூ.150 கோடியை தாண்டியது. 18 ஆம் நாள் பாக்ஸ் ஆபிஸில் படம் ரூ.204.47 கோடியாக உள்ளது.

## அரிவாளுடன் பிறந்த நாள் கொண்டாடிய ரவுடிகள்; 10 பேர் கும்பல் அதிரடி கைது

திருச்சி, மே 23

திருச்சி திருவெறும்பூர் பகுதியில் அரிவாள், கத்தியுடன் கேக் வெட்டி பிறந்த நாள் கொண்டாடிய 10 ரெளடிகளை கைது செய்த காவல் துறையினர் அவர்களை திருச்சி மத்திய சிறையில் அடைத்தனர்.

திருச்சி மாவட்டம், திருவெறும்பூர் அருகே உள்ள பனையக் குறிச்சி மேல தெருவைச் சேர்ந்தவர் கொம்பன் ஜெகன் (எ) ஜெகதீசன் (வயது 29). இவது மீது பல கொலை வழக்குகள் நிலுவையில் உள்ள நிலையில், கூலிப்படையாகவும் செயல்பட்டு வருவதுடன் அடிதடி உள்ளிட்ட பல்வேறு வழக்குகள் நிலுவையில் உள்ளன.

இந்த நிலையில் கடந்த 19ம் தேதி ஜெகன் தனது பிறந்தநாள் விழாவை திருச்சி பகுதியில் போஸ்டர்கள் ஒட்டி பெரிய அளவில் கொண்டாடியுள்ளார்.

சொந்த ஊரில் வாண வேடிக்கை முழங்க கார் மீது அமர்ந்து ஊர்வலம் சென்று உள்ளார். பின்னர் நண்பர்கள் மத்தியில் பிறந்தநாள் கேக் வெட்டி உள்ளார். இந்த பிறந்தநாள் விழாவில் ஜெகனுடன் தொடர்புடைய பல ரவுடிகள் கலந்து கொண்டுள்ளனர். அதனைத் தொடர்ந்து 20ம் தேதி இரவு பிறந்தநாளையொட்டி கூட்டாளிகளுக்கு கிடா கறியுடன் ஜெகன் வீட்டில் விருந்து கொடுத்துள்ளார்.

அங்கு கூடிய கூட்டாளிகள் அரிவால், கத்தி, உள்ளிட்ட ஆயுதத்துடன் வந்து விருந்தில் கலந்து கொண்டுள்ளனர். இச்சம்பவம் பற்றி திருவெறும்பூர் காவல் துறையினருக்கு தகவல் கிடைத்ததும் திருவெறும்பூர் டிஎஸ்பி அறிவழகன் தலைமையிலான திருவெறும்பூர் காவல் துறையினர் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று ஜெகன் மற்றும் அவனது கூட்டாளிகள் 10 பேரை கைது செய்தனர்.

கைது செய்து காவல் துறையினர் வாகனத்தில் அழைத்து சென்றபோது காவல் வாகனத்தின் கண்ணாடியை தனது தலையில் மோதிகொண்டு ஜெகன் அடம் செய்து உள்ளான். இதனைத் தொடர்ந்து கைது செய்யப்பட்டவர்கள் அனைவரும் திருச்சி மத்திய சிறையில் அடைக்கப்பட்டனர்.



தேனி மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் நடைபெற்ற மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில், மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில், பார்வையற்ற மாணவர்களுக்கான தொடு உணர்வு வாசிக்கும் கருவியினை மாவட்ட கலெக்டர் ஷஜீவனா வழங்கினார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் ஜெயபாரதி, மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் காமாட்சி ஆகியோர் உள்ளனர்.


PRIME URBAN DEVELOPMENT INDIA LTD — we make your dreams come true —

**பிரைம் அர்பன் டெவலப்மென்ட் இந்தியா லிமிடெட்**

CIN: L70200TZ1936PLC000001

பதிவு அலுவலகம்: கதவு எண்.164/18 மருதாச்சலபுரம் மெயின் ரோடு, ரேஷன் கடைக்கு எதிரில், 60 அடி சாலை, திருப்பூர் - 641 603, தமிழ்நாடு, இந்தியா

E-mail: companysecretary@ptlonline.com, Web: www.ptlonline.com

**மார்ச் 31, 2023 இல் முடிவடைந்த காலாண்டு மற்றும் ஆண்டுக்கான தனித்த மற்றும் ஒருங்கிணைந்த தணிக்கை செய்யப்பட்ட நிதி முடிவுகளின் சுரக்கம்**

( ஒரு பங்கின் வருமானம் தவிர மற்ற தொகைகள் யாவும் ₹ இலட்சங்களில் )

| வ. எண் | விபரங்கள் | Standalone Results | | | Consolidated Results | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | காலாண்டு முடிவு 31.03.2023 Audited (*) | ஆண்டு முடிவு 31.03.2023 Audited | தொடர்புடைய காலாண்டு முடிவு 31.03.2022 Audited (*) | காலாண்டு முடிவு 31.03.2023 Audited (*) | ஆண்டு முடிவு 31.03.2023 Audited | தொடர்புடைய காலாண்டு முடிவு 31.03.2022 Audited (*) |
| 1 | செயல்பாடுகளின் மூலம் நிகர வருமானம் மற்றும் இதர வருமானம் | 35.84 | 472.41 | 76.25 | 222.37 | 1,312.66 | 160.95 |
| 2 | வரிக்கு முன்பு உள்ள நிகர லாபம் / (நஷ்டம்) (மற்ற அசாதாரண செலவினங்களுக்கு முன்) | (51.50) | (110.43) | (19.59) | (47.72) | (104.57) | (72.78) |
| 3 | வரிக்கு முன்பு உள்ள நிகர லாபம் / (நஷ்டம்) (மற்ற அசாதாரண செலவினங்களுக்கு பின்) | (51.50) | (110.43) | (295.58) | (47.72) | (104.57) | (72.78) |
| 4 | வரிக்கு பின்பு உள்ள நிகர லாபம் / (நஷ்டம்) (அசாதாரண செலவினங்களுக்கு பின்) | (51.50) | (51.17) | (295.58) | (50.07) | (47.66) | (71.25) |
| 5 | இக்காலத்திற்கான மொத்த விரிவான வருமானம் (இக்காலத்திற்கான வரிக்கு பின் நிகர லாபம் மற்றும் வரிக்கு பிந்தைய ஏனைய விரிவா வருமானமும் உள்ளிட்டது) | (51.23) | (50.90) | (293.95) | (49.80) | (46.56) | (69.62) |
| 6 | செலுத்தப்பட்ட ஈக்விட்டி பங்குத்தொகை (ஒரு பங்கிற்கு ரூ.2/- முக மதிப்பு) | 532.87 | 532.87 | 532.87 | 532.87 | 532.87 | 532.87 |
| 7 | ரிசர்வுகள் (மறுமதிப்பீடு ரிசர்வுகள் நீங்கலாக) கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் உள்ளது போன்றது) | | (502.73) | | | (704.03) | |
| 8 | ஒரு பங்கின் வருவாய் (Face Value of Rs.2/- each) not annualised) | | | | | | |
| | அ. ஒரு பங்கிற்கான வருவாய் அசாதாரண அயிட்டங்களுக்கு முன்பாக | (0.19) | (0.19) | (0.07) | (0.19) | (0.18) | (0.27) |
| | ஆ. ஒரு பங்கிற்கான வருவாய் அசாதாரண அயிட்டங்களுக்கு பின்பாக | (0.19) | (0.19) | (1.11) | (0.19) | (0.18) | (0.27) |

குறிப்பு:

1. தணிக்கை செய்யப்பட்ட தனித்த மற்றும் ஒருங்கிணைத்த நிதி முடிவுகள் இந்தியன் கணக்கியல் தரநிலைகளில் (Ind AS 34) நிறுவனங்கள் சட்டம் 2013-ன் விதிகள் பொருந்தக்கூடிய மற்றும் SEBI (Listing Obligation and Disclosure Requirements) விதிமுறைகள் 2015இன் பத்திரங்கள் மற்றும் வழிகாட்டுதல்களால் வழங்கப்பட்ட அங்கீகாரம் மற்றும் அளவீடுகளுக்கு ஏற்ப தயாரிக்கப்பட்டுள்ளன.
2. மேலே குறிப்பிடப்பட்டுள்ள முடிவுகளை தணிக்கை குழு மதிப்பாய்வு செய்து 2023ம் ஆண்டு மே 22ம் தேதி நடைபெற்ற கூட்டத்தில் இயக்குனர் குழுவினால் அங்கீகரிக்கப்பட்டது. Regulations 33 of SEBI (Listing and other Disclosure Requirements) Regulations, 2015-ன் படி இந்த முடிவானது சட்டப்பூர்வ தணிக்கையாளர்களால் தணிக்கை செய்யப்பட்டது.
3.* முந்தைய ஆண்டின் கடைசி காலாண்டு மற்றும் தொடர்புடைய காலாண்டின் புள்ளிவிவரங்கள், முழு நிதியாண்டிற்கான தணிக்கை செய்யப்பட்ட புள்ளிவிவரங்கள் மற்றும் தணிக்கை செய்யப்படாத வெளியிடப்பட்ட ஆண்டு முதல் நடப்பு நிதியாண்டு மற்றும் முந்தைய நிதியாண்டின் மூன்றாம் காலாண்டு வரையிலான புள்ளிவிபரங்களுக்கு இடையே உள்ள புள்ளிவிவரங்கள் ஆகும்.
4. மேலே உள்ளவை காலாண்டு நிதி முடிவுகளின் விரிவான வடிவத்தின் சுருக்கம் ஆகும். இதன் விரிவான முடிவுகளை நிறுவனத்தின் வலைதளமன www.ptlonline.com மற்றும் BSE லிமிடெட் I www.bseindia.com வலைதளத்திலும் பார்வையிடலாம்.

(For and on behalf of the Board)

**புருஷோத்தம்தாஸ் பட்டோடியா**
**தலைவர் மற்றும் நிர்வாக இயக்குனர்**
**DIN 00032088**

**இடம்: திருப்பூர்**
**தேதி: 22.05.2023**


Owned, Edited, Printed and Published by M.N.SUDHAN APPADURAI at Publicity Print House, 125-126, Eighth Street, Gandhipuram, Coimbatore-12, Ph: 0422-2496405, 4372720 web:www.pirpagal.com Email:afternooncbe@gmail.com



அனல் காற்று வீசும் காலங்களில் கடைபிடிக்க வேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து சேலம் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் அனைத்துத்துறை அலுவலர்களுடனான ஆலோசனை கூட்டம் மாவட்ட கலெக்டர் கார்மேகம், தலைமையில் நடைபெற்றது. உடன் கூடுதல் கலெக்டர் பாலச்சந்தர், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சிவகுமார், மாவட்ட வருவாய் அலுவலர் மேனகா, மாநகர காவல் துணை ஆணையர் லாவண்யா உள்ளிட்ட அனைத்து துறை அரசு அலுவலர்கள் உள்ளனர்.

# பிறந்த நாளுக்கு முந்தைய நாள் இறந்த சிறுவனின் ஆசையை நிறைவேற்றிய சோகம்

## கேக் வெட்டி கதறிய பெற்றோர்





**ஆசிபாபாத், மே 23**

தெலங்கானா ஆசிபாபாத் பகுதியை சேர்ந்தவர் குணவத் ராவ் மற்றும் லலிதா தம்பதியினர். இவர்களுக்கு 16 வயதில் சச்சின் என்ற மகன் ஒருவர் உள்ளார். நன்றாக படிக்கும் இந்த மாணவர் அதிகமான நண்பர்களையும் கொண்டுள்ளார். இந்த சூழலில் சிறுவனுக்கு கடந்த வியாழக்கிழமை பிறந்தநாள் வந்துள்ளது. எனவே சிறுவன் தனது பிறந்தநாளை வெகு விமர்சையாக கொண்டாட எண்ணியுள்ளார். அதன்படி சிறுவனின் பெற்றோர், அவருக்கு பிரம்மாண்டமாக பிறந்தநாள் கொண்டாட திட்டமிட்டுள்ளனர்.

அதன்படி கேக், நண்பர்களுக்கு அழைப்பு என எல்லாம் தயார் நிலையில் இருந்துள்ளது. ஆனால் பிறந்தநாளுக்கு முந்தைய நாள் மாலை நேரத்தில், சிறுவனுக்கு திடீரென வயிறு வலி ஏற்பட்டுள்ளது. இதனால் பெற்றோர் அவரை மருத்து வமனைக்கு கொண்டு சென்றனர். அங்கே அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது.

ஆனால் சிறுவன் சிகிச்சை பலனின்றி பரிதாபமாக உயிரிழந்தார். அவரது உயிரிழப்புக்கு காரணம் மாரடைப்பு என்று மருத்துவர்கள் தெரிவித்தனர். இதனை கேட்டு அதிர்ந்துபோன பெற்றோர், சிறுவனை பார்த்து கதறி அழுதனர்.

இதைத்தொடர்ந்து சிறுவனின் பிறந்தநாள் அன்று காலை, அவருக்கு வாங்கி வைத்திருந்த புது துணியை அவருக்கு அணிவித்து, வாங்கி வைத்திருந்த கேக்கை அவரது முன்வைத்து, மெழுகுவர்த்தி ஏற்றி அனைவரும் கைதட்ட, சிறுவனின் கைபிடித்து பெற்றோர் கேக்கை வெட்டி கொண்டாடினர். பின்னர் அன்று முழுவதும் சிறுவனின் உடல் அஞ்சலிக்கு வைக்கப்பட்டு, மறுநாள் சிறுவனின் உடலை நல்லடக்கம் செய்யப்பட்டது. பிறந்தநாளுக்கு முந்தைய நாள் சிறுவன் மாரடைப்பால் உயிரிழந்துள்ள சம்பவம் அந்த பகுதியில் பெரும் அதிர்ச்சியையும் சோகத்தையும் ஏற்படுத்தியுள்ளது. அண்மைக் காலமாக இது போல் சிறுவர்கள் மாரடைப்பு காரணமாக உயிரிழந்து வரும் செய்திகள் வெளியாகி அனைவர் மத்தியிலும் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

குஜராத் கலவர ஆவணப்படத்தை எதிர்த்து

# அவதூறு வழக்கு - பிபிசிக்கு டெல்லி உயர் நீதிமன்றம் நோட்டீஸ்



**புதுடெல்லி, மே 23**

நாட்டின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தும் நோக்கத்துடன் குஜராத் படுகொலை குறித்த ஆவணப்படத்தை வெளியிட்டதாகக் கூறி தொடர்ந்த வழக்கில் பிபிசி செய்தி நிறுவனம் பதிலளிக்குமாறு டெல்லி உயர் நீதிமன்றம் நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

2002ம் ஆண்டு குஜராத்தில் மத வன்முறைகள் மூலம் ஆயிரக் கணக்கான முஸ்லிம்கள் படுகொலை செய்யப்பட்டனர். அப்போது அம்மாநில முதல்வராக இருந்தவர் தற்போதைய பிரதமர் நரேந்திர மோடி.

2002ம் ஆண்டு குஜராத்தில் நடைபெற்ற வன்முறைச் சம்பவங்களின் போது முஸ்லிம்கள் தேடித் தேடி படுகொலை செய்யப்பட்டனர். இது தொடர்பாக ஏராளமான வழக்குகள் தொடரப்பட்டன. இந்நிலையில் அனைத்து வழக்குகளிலும் பிரதமர் மோடி மீது எந்தவித குற்றமும் இல்லை என விடுவிக்கப்பட்டார்.

இந்நிலையில் 2002ம் ஆண்டு நடந்த முஸ்லிம் படுகொலைச் சம்பவங்கள் தொடர்பாக பிபிசி செய்தி நிறுவனம் 2 ஆவணப்படங்களை சில மாதங்களுக்கு முன்பு வெளியிட்டது. இந்த ஆவணப்படங்கள், பிரதமர் மோடியை குற்றம்சாட்டுவதாக இருந்ததால் மிகப்பெரும் சர்ச்சை ஏற்பட்டது.

பிபிசி ஆவணப்படத்தை எதிர்க்கட்சிகள் பல்வேறு மாநிலங்களில் வெளியிட்டனர். இதையடுத்து இந்த ஆவணப் படங்களை நாடு முழுவதும் வெளியிடுவதற்கு மத்திய அரசு தடை விதித்தது. இது மிகப் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

இதனிடையே, குஜராத்தைச் சேர்ந்த நீதிக்கான விசாரணை என்ற தன்னார்வ தொண்டு நிறுவனம் டெல்லி உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளது. அதில், இந்தியாவுக்கும், அதன் நீதித் துறைக்கும், பிரதமர் மோடிக்கும் களங்கம் விளைவிக்கும் நோக்கில் பிபிசி ஆவணப் படம் தயாரித்து வெளியிட்டதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இந்த வழக்கு டெல்லி உயர் நீதிமன்ற நீதிபதி சச்சின் தத்தா முன்னிலையில் நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது இந்த வழக்கில் மனுதாரர் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் ஹரிஷ் சால்வே கூறியதாவது: பிபிசிதான் (இங்கிலாந்து) இந்த ஆவணப்படத்தைத் தயாரித்து வெளியிட்டது. பிபிசி (இந்தியா) அதன் இந்திய கிளை மட்டுமே. இந்த ஆவணப்படம் இந்தியாவின் நற்பெயருக்கு மட்டுமல்லாது, அதன் நீதித்துறை உள்பட ஒட்டுமொத்த அமைப்பின் நற்பெயருக்கும் களங்கம் விளைவித்துள்ளது. பிரதமர் நரேந்திர மோடிக்கு எதிராகவும் குற்றச் சாட்டை இந்த ஆவணப்படம் முன்வைக்கிறது. இவ்வாறு வழக்கறிஞர் ஹரிஷ் சால்வே வாதிட்டார்.

இதையடுத்து நீதிபதி சச்சின்தத்தா கூறும்போது, "இந்த வழக்கில் அனுமதிக்கப்பட்ட அனைத்து வழிகள் மூலமாகவும் பிபிசி (இங்கிலாந்து), பிபிசி (இந்தியா) ஆகியவை பதில் அளிக்க நோட்டீஸ் அனுப்ப வேண்டும்" என்று உத்தரவிட்டார்.

மேலும், வழக்கு விசாரணையை வரும் செப்டம்பர் 15ம் தேதிக்கு தள்ளிவைத்தார்.

7 ஐஏஎஸ் அதிகாரிகள் மாற்றம்:

# செங்கல்பட்டு, தூத்துக்குடி கலெக்டர்கள் இடமாற்றம் ரத்து

**சென்னை, மே 23**

செங்கல்பட்டு, தூத்துக்குடி மாவட்ட கலெக்டர்களின் பணி மாறுதல் ரத்து செய்யப்பட்டுள்ளது. தற்போது 7 ஐஏஎஸ் அதிகாரிகள் அதிரடியாக மாற்றம் செய்யப்பட்டுள்ளனர். இது குறித்து தலைமைச் செயலாளர் இறையன்பு வெளியிட்டுள்ள உத்தரவு: தமிழ்நாடு பைபர் நெட் கழக நிர்வாக இயக்குநர் கமல் கிஷோர், மாற்றுத் திறனாளிகள் நல இயக்குநராக மாற்றம் செய்யப்பட்டுள்ளார். இவர் ஏற்கனவே செங்கல்பட்டு கலெக்டராக மாற்றப்பட்டிருந்தார். அந்த உத்தரவு தற்போது ரத்து செய்யப்பட்டுள்ளது. ஆவின் நிர்வாக இயக்குநர் சுப்பையன், கூட்டுறவு சங்கங்களின் பதிவாளராக மாற்றப்பட்டுள்ளார். செங்கல்பட்டு கலெக்டராக இருந்த ராகுல்நாத், ஏற்கனவே தூத்துக்குடி மாவட்ட கலெக்டராக மாற்றப்பட்டிருந்தார். தற்போது அந்த உத்தரவு ரத்து செய்யப்பட்டு, செங்கல்பட்டு கலெக்டராக தொடர்ந்து நீடிப்பார்.

அதேபோல, தூத்துக்குடி கலெக்டர் செந்தில்ராஜ், ஏற்கனவே கூட்டுறவு சங்கங்களின் பதிவாளராக மாற்றப்பட்டிருந்தார். அந்த உத்தரவு தற்போது ரத்து செய்யப்பட்டு, தூத்துக்குடி கலெக்டராக தொடர்ந்து நீடிப்பார். திருப்பூர் கலெக்டர் வினித், மாற்றுத் திறனாளிகள் நலத்துறை இயக்குநராக மாற்றப்பட்டிருந்தார். தற்போது அந்த உத்தரவு ரத்து செய்யப்பட்டு, ஆவின் நிர்வாக இயக்குநராக நியமிக்கப்பட்டுள்ளார்.

நிதித்துறை செயலாளர் உதயசந்திரன், தொல்லியல்துறை ஆணையர் பதவியை கூடுதலாக கவனிப்பார். அதேநேரத்தில் அவர் கூடுதல் பொறுப்பாக கவனித்து வந்த சிறப்பு திட்ட அமலாக்கத்துறை செயலாளர் பதவியை, தற்போது மக்கள் நல்வாழ்வுத்துறை செயலாளர் ககன்தீப் சிங் பேடி கூடுதலாக கவனிப்பார். இவ்வாறு அந்த உத்தரவில் கூறப்பட்டுள்ளது.

# 193 சுயேச்சை சின்னங்களை வெளியிட்டது தேர்தல் ஆணையம்

**புதுடெல்லி, மே 23**

வாக்கிங் ஸ்டிக் முதல் பேபி வாக்கர் வரை 193 சுயேச்சை சின்னங்களை தேர்தல் கமிஷன் வெளியிட்டுள்ளது. மக்களவை தேர்தல் மற்றும் இந்த ஆண்டு இறுதியில் மாநில தேர்தல்களை நடத்த தேர்தல் ஆணையம் தயாராகி வருகிறது. அதன் முதல் கட்டமாக அங்கீகாரம் இல்லாத கட்சிகள் மற்றும் சுயேச்சை வேட்பாளர்களுக்கு சின்னங்கள் ஒதுக்குவதற்கான பணிகள் நடந்தன.

அதன் அடிப்படையில் வாக்கிங் ஸ்டிக் முதல் பேபி வாக்கர் வரையில் புதிதாக 193 சுயேச்சை சின்னங்களை தேர்தல் கமிஷன் தயாரித்து வெளியிட்டுள்ளது.

கடந்த மே15ம் தேதி தேர்தல் ஆணையம் இந்த சின்னங்களை வெளியிட்டுள்ளது. இதில் வாக்கிங் ஸ்டிக், பேபி வாக்கர், ஏர் கண்டிஷனர், பலூன், வளையல்கள், விசில், ஜன்னல், கம்பளி ஊசி, தர்ப்பூசணி, வால்நட், மணிபர்ஸ், வயலின், வாக்கும் கிளீனர் உள்ளிட்டவை இடம் பெற்றுள்ளன.

மிசோரம், சட்டீஸ்கர், மத்தியப் பிரதேசம், ராஜஸ்தான், தெலுங்கானா சட்டசபை தேர்தல் மற்றும் 2024 மக்களவை தேர்தல்களில் இந்த சின்னங்கள் சுயேச்சை வேட்பாளர்களுக்கு ஒதுக்கப்படும் என்று தெரிகிறது.

# சென்னை உயர் நீதிமன்ற பொறுப்பு தலைமை நீதிபதி நாளை பணி ஓய்வு





**சென்னை, மே 23**

உயர் நீதிமன்ற தலைமை நீதிபதியாகப் பதவி வகித்த முனீஷ்வர்நாத் பண்டாரி, கடந்த ஆண்டு செப். 12ம் தேதி பணி ஓய்வு பெற்றார். இந்நிலையில், சென்னை உயர் நீதிமன்றத்தின் பொறுப்பு தலைமை நீதிபதியாக டி.ராஜா கடந்த ஆண்டு செப்டம்பர் முதல் கடந்த 8 மாதங்களாக பதவி வகித்து வருகிறார். அவர் நாளையுடன் (மே 24) பணி ஓய்வு பெற உள்ளார். அவருக்கான பிரிவு உபசார விழா உயர் நீதிமன்ற வளாகத்தில் நாளை நடைபெற உள்ளது.

பொறுப்பு தலைமை நீதிபதியாக பதவி வகித்த டி.ராஜாவை ஏற்கெனவே ராஜஸ்தான் உயர் நீதிமன்றத்துக்கு இடமாறுதல் செய்ய உச்ச நீதிமன்ற கொலீஜியம் கடந்த ஆண்டு நவம்பரில் மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்திருந்தது. ஆனால், அவரை இடமாறுதல் செய்யக் கூடாது என சென்னை உயர் நீதிமன்ற வழக்கறிஞர்கள் சங்கத்தினர் விடுத்த கோரிக்கை மற்றும் அவரும் தனது இடமாறுதலை மறுபரிசீலனை செய்யுமாறு விடுத்த கோரிக்கை ஆகியவற்றை பரிசீலித்த மத்திய அரசு, தொடர்ந்து அவரை சென்னை உயர் நீதிமன்றத்தில் பொறுப்பு தலைமை நீதிபதியாகப் பணியாற்ற அனுமதித்தது.

இந்நிலையில், உச்ச நீதிமன்ற கொலீஜியம் கடந்த ஏப். 19ம் தேதி மும்பை உயர் நீதிமன்ற பொறுப்பு தலைமை நீதிபதியாக உள்ள எஸ்.வி.கங்கா பூர்வா லாவை, சென்னை உயர் நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக நியமிக்க மத்திய அரசுக்கும், குடிய ரசுத் தலைவருக்கும் பரிந்துரைத்துள்ளது.

தற்போது கொலீஜியத்தின் இந்தப் பரிந்துரையை ஏற்று சென்னை உயர் நீதி மன்றத்தின் தலைமை நீதிபதியாக எஸ்.வி.கங்கா பூர்வாலா நியமிக்கப் படுவாரா என்ற எதிர்பார்ப்பு நீதித் துறை வட்டாரத்தில் நிலவுகிறது.

இந்நிலையில், பொறுப்பு தலைமை நீதிபதியான டி.ராஜா பணி ஓய்வு பெறவுள்ளதால், புதிய தலைமை நீதிபதி நியமிக்கப்படும் வரை, அவருக்கு அடுத்த இடத்தில் உள்ள மூத்த நீதிபதியான எஸ்.வைத்தியநாதன் சென்னை உயர் நீதிமன்றத்தின் பொறுப்பு தலைமை நீதிபதியாக நியமிக்கப்படுவார் என்று தெரிகிறது. டி.ராஜா தனது 8 மாத பதவிக் காலத்தில், உயர் நீதிமன்றத்துக்கு புதிதாக நியமிக்கப்பட்ட 13 புதிய நீதிபதிகளுக்கும், 5 கூடுதல் நீதிபதிகளை நிரந்தர நீதிபதிகளாகவும் பதவிப் பிரமாணம் செய்து வைத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# குஜராத் அணிக்கு எதிரான போட்டியில் முதல் வெற்றியை பதிவு செய்யுமா சென்னை?

## ஆர்வத்துடன் காத்திருக்கும் ரசிகர்கள்




**சென்னை, மே 23**


ஐபிஎல் கிரிக்கெட் தொடரில் நேற்று நடைபெற்ற பெங்களூரு அணிக்கு எதிரான போட்டியில் குஜராத் டைட்டன்ஸ் அணி 6 விக்கெட் வித்தியாசத்தில் வென்றது. இந்த தோல்வியால் ப்ளே ஆஃப் சுற்றுக்கு செல்லும் வாய்ப்பை பெங்களூரு அணி இழந்தது. 14 போட்டிகளில் விளையாடி 16 புள்ளிகளைப் பெற்றிருந்த மும்பை அணி தற்போது ப்ளே ஆஃப் சுற்றுக்குள் நுழைந்துள்ளது.

ஐபிஎல் டி20 தொடரின் 16வது சீசன் லீக் சுற்று ஆட்டங்கள் நிறைவடைந்த நிலையில், பிளே ஆப் சுற்றின் குவாலிபயர் 1 ஆட்டம் சேப்பாக்கம் எம்.ஏ.சிதம்பரம் ஸ்டேடியத்தில் இன்று (23ம் தேதி) இரவு 7.30க்கு தொடங்கி நடைபெற உள்ளது. அந்த போட்டியில் புள்ளிப் பட்டியலில் முதலிடம் பிடித்த நடப்பு சாம்பியன் குஜராத் டைட்டன்ஸ் (18 புள்ளி) அணியுடன் 2வது இடம் பிடித்த சென்னை சூப்பர் கிங்ஸ் மோதுகிறது.

நாளை சென்னையில் நடைபெற உள்ள எலிமினேட்டர் ஆட்டத்தில் 3வது இடம் பிடித்த லக்னோ சூப்பர் ஜயன்ட்ஸ் அணியுடன் 4வது இடம் பிடித்த அணி பலப்பரீட்சை நடத்தும். இதைத் தொடர்ந்து, குவாலிபயர்2 மற்றும் இறுதிப் போட்டி அகமதாபாத் மோடி ஸ்டேடியத்தில் மே 26, மே 28ல் நடைபெற உள்ளன.

சென்னை சேப்பாக்கத்தில் இதுவரை குஜராத் அணி ஒரு போட்டியில் கூட விளையாடியதில்லை. ஹோம் கிரவுண்ட் சூழல், சென்னை அணிக்கு சாதகமாக அமையுமா? அல்லது, இதுவரை சி.எஸ்.கே அணியிடம் தோற்றதே இல்லை என்ற சாதனையை குஜராத் தக்க வைக்குமா? என்பதை பார்க்க கிரிக்கெட் ரசிகர்கள் ஆவலுடன் உள்ளனர்.

# சர்வதேச விண்வெளி நிலையத்துக்கு ராக்கெட்டில் பறந்த முதல் அரபு பெண்






**கேப் கனாவெரல், மே 23**

அமெரிக்காவின் ஹூஸ்டன் நகரைச் சேர்ந்த, 'ஆக்சியாம் ஸ்பேஸ்' என்ற நிறுவனம், விண்வெளி வீரர்கள் அல்லாத சாமானியர்களையும் சர்வதேச விண்வெளி நிலையத்துக்கு அழைத்து செல்லும் சுற்றுலாவை நடத்துகிறது. கடந்த ஆண்டு நடந்த சர்வதேச விண்வெளி நிலைய பயணத்தில், ஓய்வு பெற்ற நாசா விண்வெளி வீரருடன், முதல்முறையாக அமெரிக்காவைச் சேர்ந்த மூன்று தொழிலதிபர்கள் பயணித்தனர்.

இந்த ஆண்டுக்கான பயணத்துக்கு, சவுதி அரேபிய அரசு நிதி உதவி செய்தது. அந்நாட்டைச் சேர்ந்த மார்பக புற்றுநோய் ஆய்வாளரான ரயானா பர்னாவி என்ற பெண்ணும், சவுதி போர் விமான பைலட்டான அலி அல்குவார்னி என்ற நபரும் இந்த பயணத்தில் இடம் பெற்றனர்.

அமெரிக்காவின் டென்னிசி மாகாணத்தைச் சேர்ந்த ஜான் ஷாப்னர் என்ற தொழிலதிபரும், அமெரிக்க விண்வெளி ஆய்வு மையமான நாசாவின் முன்னாள் விண்வெளி வீராங்கனையுமான பெக்கி விட்சன் ஆகியோரும் இந்த பயணத்தில் இடம் பெற்றனர்.'ஸ்பேஸ் எக்ஸ்' நிறுவனத்துக்கு சொந்தமான, 'பால்கன் 9' ராக்கெட்டில் இவர்கள் நால்வரும் புறப்பட்டனர். அமெரிக்காவின் கேப் கனாவெரலில் உள்ள கென்னடி விண்வெளி மையத்தில் இருந்து, அந்நாட்டு நேரப்படி நேற்று முன்தினம் மாலை 5:37 மணிக்கு ராக்கெட் புறப்பட்டது. அவர்கள் நேற்று காலை சர்வதேச விண்வெளி ஆய்வு நிலையத்தை சென்றடைந்தனர். அங்கு ஒரு வாரம் தங்கியிருந்து, பூமிக்கு திரும்ப உள்ளனர்.

சவுதி அரேபியாவைச் சேர்ந்த இளவரசர், 1985ல், 'டிஸ்கவரி' விண்கலத்தில் விண்வெளி பயணம் மேற்கொண்டார். அதன் பின், சவுதியில் இருந்து விண்வெளிக்கு பயணிக்கும் நபர்கள் என்ற பெருமையை இந்த இருவரும் பெற்றுள்ளனர்

# கோடை மின்தேவையை சமாளிக்க கூடுதல் காற்றாலை மின்சாரம் வாங்கத் திட்டம்

## தமிழ்நாடு மின் வாரியம் நடவடிக்கை

**சென்னை, மே 23**

தமிழகத்தில் தினசரி மின் தேவை சராசரியாக 15 ஆயிரம் மெகாவாட் ஆகும். இதில், விவசாயத்தின் பங்கு 2,500 மெகாவாட்.

கோடை காலத்தில் தினசரி மின் தேவை 16 ஆயிரம் மெகா வாட்டாக அதிகரிக்கும்.

கடந்த சில நாட்களாக வெயில் சுட்டெரிக்கிறது. இதனால் தினமும் 18 ஆயிரம் மெகாவாட் மின்சாரம் தேவைப்படுகிறது. மேலும், விவசாயப் பிரிவில் கூடுதலாக வழங்கப்பட்ட 1.50 லட்சம் மின் இணைப்புகளால், அந்தப் பிரிவில் மட்டும் கூடுதலாக 727 மெகாவாட் மின்சாரம் தேவைப்படுகிறது.இத்தகைய காரணங் களால், கடந்த 18ம் தேதி மாநிலத்தின் மின் நுகர்வு 18,882 மெகா வாட்டாக அதிகரித்து, புதிய உச்சத்தை எட்டியது. இதனால் காற்றாலை மின்சாரத்தை கூடுதலாக வாங்க மின்வாரியம் திட்டமிட்டுள்ளது.

இதுகுறித்து, மின்வாரிய அதிகாரிகள் கூறியதாவது: தினசரி மின் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக, தற்போது மத்திய அரசின் மின் உற்பத்தி நிலையங்களில் 5,055 மெகாவாட்டும், மின் வாரியத்தின் அனல் மின் நிலையங்களில் இருந்து 3,019 மெகாவாட்டும் பெறப்படுகிறது.

இவை தவிர, தனியார் மின் உற்பத்தி நிறுவனங்களிடம் இருந்தும் மின்சாரம் வாங்கப்படுகிறது.

தற்போது காற்றாலை மின்சாரம் கூடுதலாக வாங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

தற்போது, காற்றாலை மூலம் உற்பத்தி செய்யப்படும் மின்சாரம் தினமும் 1,000 மெகாவாட் வாங்கப்படுகிறது. மே மாதம் முதல் நவம்பர் வரை காற்றாலை சீசன் ஆகும். அந்த சமயத்தில் காற்றாலை மூலம் அதிக அளவு மின்சாரம் உற்பத்தி செய்யப்படும்.

இந்த மின்சாரம் முழுவதுமாக பயன் படுத்திக் கொள்ளப்படும்.

காலை தொட்ட பப்புவா நியூ கினியா பிரதமர்:

# மோடியை பெரிய மந்திரவாதி என்று நினைத்திருப்பார் - சஞ்சய் ரவுத் கிண்டல்



**மும்பை, மே 23**

மோடியை பெரிய மந்திரவாதி என்று நினைத்திருப்பார்கள் என்று பிரதமர் மோடியின் காலை பப்புவா நியூ கினியா பிரதமர் தொட்டு வணங்கிய சம்பவத்தை சஞ்சய் ரவுத் கிண்டல் தெரிவித்தார்.

இந்திய பசிபிக் தீவுகளின் ஒருங்கிணைந்த மாநாட்டில் பங்கேற்க பப்புவா நியூ கினியா நாட்டுக்கு பிரதமர் மோடி நேற்று முன்தினம் சென்றார். இந்திய பிரதமர் நரேந்திர மோடியை அந்நாட்டின் பிரதமர் ஜேம்ஸ் மார்பே விமான நிலையத்தில் வரவேற்றார். அப்போது இந்திய பிரதமர் மோடியின் காலை தொட்டு ஜேம்ஸ் மார்பே வணங்கினார். இது சம்பவம் உலகம் முழுவதும் மிகவும் வைரலானது. இது தொடர்பாக உத்தவ் தாக்கரே சிவ சேனாவின் (யுபிடி) மூத்த தலைவர் சஞ்சய் ரவுத் கூறுகையில், பா.ஜ.க. பப்புவா நியூ கினியா நாட்டின் வரலாற்றை புரிந்து கொள்ள வேண்டும். அந்நாடு சூனியத்தால் நிறைந்துள்ளது. நாட்டில் உள்ளவர்கள் நிறைய சூனியம் செய்கிறார்கள். இந்தியாவில் இருந்து யாரோ பெரிய மந்திரவாதி வந்திருப்பதாகவும் அவர் தங்களுக்கு மந்திரம் கற்பிப்பார்கள் என்று நினைத்தார்கள். அதனால் அவர்கள் அவரை அப்படி வாழ்த்தினர்.

வயதானவர் என்பதால் பிரதமர் மோடியின் பாதங்களை யாராவது தொட்டு வணங்கினால் நல்லது. நாங்களும் அவரை சந்திக்கும் போது குனிந்து நமஸ்காரம் செய்வோம். ஆனால், பா.ஜ.க. அதைப் பற்றி பிரச்சாரம் செய்யும் விதம் சரியில்லை. எங்கள் தலைவர்களான பண்டிட் நேரு, லால் பகதூர் சாஸ்திரி, இந்திரா காந்தியும் நாட்டை விட்டு வெளியே சென்றிருக்கிறார்கள், மக்கள் அவர்களின் கால்களையும் தொடுவார்கள் என்று தெரிவித்தார்.



கோவை மாநகராட்சி பிரதான அலுவலகத்தில் நடைபெற்ற பொதுமக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மேயர் கல்பனா ஆனந்தகுமார் பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டு சம்பந்தப்பட்ட அலுவலர்களிடம் வழங்கி உடனடியாக தீர்வுகாண உத்தரவிட்டார். உடன் துணை மேயர் வெற்றிசெல்வன், மாநகராட்சி துணை ஆணையாளர் ஷர்மிளா மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் உள்ளனர்.

# தமிழக அரசைக் கண்டித்து வரும் 29ம் தேதி அதிமுக ஆர்ப்பாட்டம்

**சென்னை, மே 23**

வரும் 29ஆம் தேதி அதிமுக சார்பில், மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகங்கள் முன்பும், மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகங்கள் இல்லாத மாவட்டங்களில் வட்டாட்சியர் அலுவலகங்கள் முன்பு அல்லது மக்கள் அதிகம் கூடும் இடங்களில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடைபெறும் என எடப்பாடி பழனிசாமி அறிவித்துள்ளார்.



இது குறித்து வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவித்து இருப்பதாவது:

இரண்டாண்டு இருண்ட திமுக ஆட்சியில், தமிழகத்தில் தொடரும் ஊழல் முறைகேடுகள்; கள்ளச் சாராயம் மற்றும் போலி மதுபானங்களால் இறப்பு; கொலை, கொள்ளை, வழிப்பறி, போதைப் பொருட்கள் புழக்கம் உள்ளிட்ட சட்டம் ஒழுங்கு சீர்கேடுகளை கட்டுப்படுத்தத் தவறிய திமுக அரசைக் கண்டித்தும்; இவைகளுக்கு முழு பொறுப்பேற்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உடனடியாக பதவி விலக வலியுறுத்தியும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், வருகின்ற 29.05.2023 (திங்கட் கிழமை) காலை 10 மணியளவில், கழக அமைப்பு ரீதியாக செயல்பட்டு வரும் மாவட்டங்களில், மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகங்கள் முன்பும், மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகங்கள் இல்லாத மாவட்டங்களில் வட்டாட்சியர் அலுவலகங்கள் முன்பு அல்லது மக்கள் அதிகம் கூடும் இடங்களில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடைபெறும்.

இதற்கான ஏற்பாடுகளை, சம்பந்தப்பட்ட மாவட்டக் கழகச் செயலாளர்கள், தங்கள் மாவட்டங்களைச் சேர்ந்த நிர்வாகிகளுடன் இணைந்து மேற்கொள்ள வேண்டும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வன்கொடுமை செய்த பெண்ணையே திருமணம் செய்த வாலிபருக்கு சிறை

**மும்பை, மே 23**

மும்பையை சேர்ந்த 31 வயது இளைஞர் ஒருவருக்கு அதே பகுதியை சேர்ந்த இளம்பெண் ஒருவர் அறிமுகமாகியுள்ளார். தொடர்ந்து பேசி வந்த இருவரும் ஒருகட்டத்தில் காதலர்களாக மாறியுள்ளனர். அந்த பெண்ணிடம் திருமணம் செய்து கொள்வதாக அந்த இளைஞர் உறுதி கூறியுள்ளார்.

இதனிடையே கடந்த 2017ம் ஆண்டு ஆண்டு ஆகஸ்ட் மாதம் காதலர்கள் இருவரும் வெளியே சென்றுள்ளனர். அப்போது அந்த பெண்ணை மறைவான இடத்துக்கு அழைத்துச்சென்ற அந்த இளைஞர் அந்த பெண்ணை அவரின் விருப்பமின்றி பாலியல் வன்கொடுமை செய்துள்ளார். அதோடு அதன்பின்னர் அந்த பெண் தன்னை திருமணம் செய்து கொள்ளுமாறு கூறிய நிலையில் அதற்கு அந்த இளைஞர் மறுப்பு தெரிவித்துள்ளார். அதனைத் தொடர்ந்து அந்தப் பெண் தன்னை பாலியல் வன்கொடுமை செய்து திருமணம் செய்ய மறுத்ததாக கூறி காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளார்.

இந்த வழக்கு நீதிமன்றத்தில் நடை பெற்ற நிலையில், அந்த இளைஞர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப் பட்டார். இதனிடையே ஜாமீனில் வெளியே வந்த அந்த இளைஞர் அந்த பெண்ணையே திருமணம் செய்து கொண்டார். இவர்களுக்கு ஒரு குழந்தையும் உள்ளது.

ஆனாலும், தொடர்ந்து நடைபெற்ற விசாரணையில் அந்த இளைஞர் குற்றம் செய்தது உறுதியானது. மேலும், அந்த இளைஞருக்கு மூன்றரை ஆண்டுகள் கடுங்காவல் தண்டணை விதித்து நீதிபதி தீர்ப்பு வழங்கியுள்ளார். மேலும், அந்த இளைஞரை திருமணம் செய்து கொண்டாலும் அவர் செய்த தவறுக்கு தண் டனை வழங்கப்பட வேண்டும் என்று அந்த பெண்ணும் உறுதியாக இருந்ததால் இந்த தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. நீதிபதியின் இந்த தீர்ப்பை பல்வேறு தரப்பினரும் வரவேற்றுள்ளனர்.

# இனிமேல் வாட்சப்பில் அனுப்பிய மெசேஜ்ஜை 15 நிமிடத்திற்குள் திருத்தலாம்

**புதுடெல்லி, மே 23**

வாட்ஸ் அப் செயலியில் நீங்கள் அனுப்பிய செய்திகளை 15 நிமிடத்திற்குள் திருத்தம் செய்யலாம் என வாட்ஸ் அப் நிறுவனம் தகவல் தெரிவித்துள்ளது. இன்று நம்மில் சிறியவர்கள் முதல் முதியவர்கள் வரை பலரும் ஸ்மார்ட் போன் பயன்படுத்துகின்றனர். ஸ்மார்ட் போன் உபயோகிப்பவர்கள் அனைவருமே வாட்ஸ் அப் பயன்படுத்துவதுண்டு. இந்த வாட்ஸ் அப்பில் நாளுக்கு நாள் புதிய அப்டேட்கள் வந்து கொண்டே தான் இருக்கிறது. அந்த வகையில் தற்போதும் ஒரு புதிய அப்டேட் அறிமுகமாக உள்ளது. அதன்படி வாட்ஸ் அப் செயலியில் நீங்கள் அனுப்பிய செய்திகளை 15 நிமிடத்திற்குள் திருத்தம் செய்யலாம் என வாட்ஸ் அப் நிறுவனம் தெரிவித்துள்ளது. இதற்கான அப்டேட் விரைவில் வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# வீராங்கனைக்கு ரூ.13.99 லட்சத்தில் நவீன சைக்கிள் வழங்கிய அமைச்சர் உதயநிதி




**கோவை, மே 23**

கோவை மாவட்டம், மேட்டுப்பாளையம் அரசு மேல்நிலைப் பள்ளியில் 10ஆம் வகுப்பு பயின்று வரும் ஷா.தபித்தா சைக்கிளிங் வீராங்கனை ஆவார். இவர் 2022ம் ஆண்டு டிசம்பர் மாதம் 11ம் தேதி முதல் 15ம் தேதி வரை அசாம் மாநிலத்தில் கவுகாத்தியில் நடைபெற்ற 14 வயதிற்குட்பட்டோருக்கான தேசிய அளவிலான சைக்கிளிங் போட்டியில் வெள்ளிப்பதக்கம் பெற்றுள்ளார்.

மேலும் ஜனவரி 2023ம் வருடம் மகாராஷ்ட்ரா மாநிலம், நாசிக்கில் 07.01.2023 முதல் 10.01.2023 வரை நடைபெற்ற 27வது தேசிய அளவிலான மிக இளையோர் (மகளிர்) சைக்கிளிங் போட்டியில் தங்கப்பதக்கம் பெற்றுள்ளார். தேசிய அளவில் நடைபெற்ற சைக்கிளிங் போட்டியில் வெற்றி பெற்று, தற்பொழுது **National Centre of Excellence (NCOE)** மூலமாக தேர்வு செய்யப்பட்டு பயிற்சி மேற்கொண்டு வருகிறார்.

இந்நிலையில் ஷா.தபித்தா பன்னாட்டு அளவிலான போட்டிகளில் பங்கேற்று வெற்றிபெறுவதற்கு ஏதுவாக போட்டிகளுக்கென்று பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்ட மிதிவண்டி வழங்கினால் பல்வேறு சாதனைகளை படைத்து நமது மாநிலத்திற்கும் நாட்டிற்கும் பெருமை சேர்க்க முடியும் என இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலினிடம் கோரிக்கை விடுத்தார்.

அவரது கோரிக்கையினை கனிவுடன் பரிசீலித்த அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் மிதிவண்டி வழங்க நடவடிக்கை மேற்கொள்ள தமிழ்நாடு விளையாட்டு மேம் பாட்டு ஆணைய அலுவலர்களுக்கு உத்தர விட்டார்.

இதனை தொடர்ந்து அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வீராங்கனை ஷா.தபித்தா கேட்டுக் கொண்டபடி தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை நிதியிலிருந்து ரூபாய் 13.99 லட்சம் மதிப்பீட்டிலான **Argon 18 PRO (Complete bike)** நவீன மிதிவண்டியை வழங்கினார்.

# பெட்ரோல் பங்க்குகளில் 2000 ரூபாய் நோட்டுகள் வாங்கப்படும் என அறிவிப்பு

**சென்னை, மே 23**

தமிழகத்தில் உள்ள பெட்ரோல் பங்குகளில் ரூ.2000 நோட்டுகள் வாடிக்கையாளர்களிடம் வாங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.



கடந்த 19ஆம் தேதி புழக்கத்தில் இருந்த 2000 ரூபாய் நோட்டு திரும்ப பெறப்படுவதாக ரிசர்வ் வங்கி அறிவித்திருந்தது. இந்த நிலையில், 2000 ரூபாய் நோட்டு மாற்றம் தொடர்பாக வங்கிகளுக்கு வழிகாட்டுதல் நெறிமுறைகளை ரிசர்வ் வங்கி வெளியிட்டுள்ளது.

இந்த நிலையில், நாளை முதல் ரூ.2000 ரூபாய் நோட்டுகளை வங்கிகளில் மாற்றி கொள்ளலாம் என்றும், 2023 செப்டம்பர் 30ஆம் தேதி வரை 2000 ரூபாய் நோட்டுகள் திரும்ப பெறப்படும் என்றும் ரிசர்வ் வங்கி அறிவித்துள்ளது.

இந்த நிலையில், தமிழகத்தில் உள்ள பெட்ரோல் பங்குகளில் ரூ.2000 நோட்டுகள் வாடிக்கையாளர்களிடம் வாங்கப்படும் என தமிழ்நாடு பெட்ரோல் பங்க் உரிமையாளர் சங்கம் அறிவித்துள்ளது.

# ஆளுநர் மாளிகை நோக்கி பேரணி: எடப்பாடி பழனிசாமி உள்ளிட்ட 5500 அதிமுகவினர் மீது வழக்குப்பதிவு



**சென்னை, மே 23**

ஆளுநர் மாளிகை நோக்கி பேரணி நடத்திய எடப்பாடி பழனிசாமி உள்ளிட்ட 5500 பேர் மீது போலீசார் வழக்குப்பதிவு செய்துள்ளனர்.

திமுக அரசை கண்டித்து சென்னை, கிண்டி ஆளுநர் மாளிகையை நோக்கி அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி தலைமையில் பேரணியாக சென்று, விஷச்சாராய மரணம் தொடர்பாக ஆளுநர் ஆர்.என்.ரவியிடம் புகார் அளித்துள்ளனர்.

இந்த நிலையில், ஆளுநர் மாளிகை நோக்கி பேரணி நடத்திய எடப்பாடி பழனிசாமி, முன்னாள் அமைச்சர்கள் ஜெயக்குமார், வளர்மதி மற்றும் மாவட்டச் செயலாளர்கள் உள்ளிட்ட 5500 பேர் மீது போலீசார் வழக்குப்பதிவு செய்துள்ளனர்.

சட்டவிரோதமாக கூடுதல், பொது அமைதிக்கு களங்கம் விளைவிக்கும் வகையில் கூட்டம் சேர்த்தல் உள்பட 3 பிரிவுகளில் வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது.

# கயானா பள்ளியில் தீ: 19 சிறுவர்கள் பலி

**ஜார்ஜ்டவுன், மே 23**

தென் அமெரிக்க நாடான கயானாவிலுள்ள பள்ளியொன்றில் தீவிபத்தில் சிக்கி 19 சிறுவர்கள் உயிரிழந்தனர்.

தலைநகர் ஜார்ஜ்டவுனுக்கு 320 கி.மீ. தொலைவிலுள்ள மஹ்தியா ஊரில் நடுநிலைப் பள்ளியொன்று அமைந்துள்ளது.

அந்தப் பள்ளி வளாகத்திலுள்ள மாணவர்கள் தங்கும் விடுதியில் ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவுக்குப் பிறகு தீப்பிடித்தது.

இந்த விபத்தில் 12 முதல் 18 வயது வரையிலான 20 மாணவர்கள் உயிரிழந்ததாக அதிகாரிகள் முதலில் தெரிவித்தனர். எனினும், பலி எண்ணிக்கை பின்னர் 19ஆகக் குறைக்கப்பட்டது.

தீவிபத்தில் உயிரிழந்த மாணவர்களில் பெரும்பாலனவர்கள் உள்ளூர் பூர்வகுடி இனத்தைச் சேர்ந்தவர்கள்.

இந்த விபத்தில் மேலும் பல சிறுவர்கள் காயமடைந்ததாகவும், அவர்களில் இருவரது நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர். விபத்துக்கான காரணம் குறித்து விசாரணை தொடங்கப்பட்டுள்ளது.

## பெட்ரோல் பங்கில்

# பேசியபோது செல்போன் தீப்பிடித்து வெடித்தது - இளம்பெண் பலி

**பெங்களூரு, மே 23**

பொதுவாக பெட்ரோல் பங்குகளில் மொபைல் போனை பயன்படுத்த வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டு வருகிறது. இருப்பினும் சிலர் மொபைல் போன்களை எடுத்து பயன்படுத்துவர். இவ்வாறு பயன்படுத்தும்போது சில நேரங்களில் விபரீதங்கள் ஏற்படுகிறது. அப்படி ஒரு சம்பவம் தான் தற்போது அரங்கேறியுள்ளது.

கர்நாடக மாநிலம் துமகுரு பகுதியல் உள்ள பெட்ரோல் பங்கில் பவ்யா என்ற இளம்பெண் தனது தாயார் ரத்னம்மாவுடன் (46) தனது வண்டிக்கு பெட்ரோல் நிரப்ப சென்றுள்ளார். அப்போது அவரது தாய் இறங்கி அருகிலேயே நிற்க, மகளோ பெட்ரோல் நிரப்பும் பம்ப் அருகே வண்டியில் இருந்து கொண்டு மொபைலை பயன்படுத்திக் கொண்டிருந்துள்ளார்.

அந்த சமயத்தில் திடீரென அவர் கையில் இருந்த செல்போன் வெடித்து தீப்பற்றி எரிந்துள்ளது. இதனைக் கண்டதும் பதற்றமடைந்த இளம்பெண், அவரது தாய், பெட்ரோல் பங்க் ஊழியர் ஆகியோர் அங்கிருந்து ஓடினர். இருப்பினும் அந்த இளம்பெண்ணின் ஆடையில் தீ பற்றிக்கொண்டது. அதனை அணைக்க முயற்சித்தும் பயனில்லாமல், அந்த தீ அவரது உடல் முழுவதும் பரவியது.

இதையடுத்து அருகில் இருந்தவர்கள் பைக்கில் பற்றிய தீயை அணைத்ததோடு, அந்த பெண்ணை மீட்டு மருத்துவ மனையில் அனுமதித் தனர். அங்கே அவருக்கு அதீத காயங்கள் ஏற்பட்டுள்ளது தெரியவந்தது.

தொடர்ந்து சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது. இந்த நிலையில், மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த அந்த இளம்பெண் சிகிச்சை பலனின்றி பரிதாபமாக உயிரிழந்தார்.

பெட்ரோல் பங்கில் ஏற்பட்ட இந்த திடீர் தீ விபத்து தொடர்பான சிசிடிவி காட்சிகள் தற்போது இணையத்தில் வைரலாகி பொதுமக்களுக்கு பீதியை ஏற்படுத்தி வருகிறது.

தொடர்ந்து இதுகுறித்து போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

பெட்ரோல் பங்கில் இதுபோல் யாரும் செய்ய வேண்டாம், மொபைல் போனை பயன்படுத்த வேண்டாம் என பொதுமக்களுக்கு அறிவுறுத்தி வருகின்றனர். இந்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.



**NATIONAL FITTINGS LIMITED**
S.F No. 112, Madhapur Road, Kaniyur, Karumathampatti Via, Sulur Taluk, Coimbatore - 641 659.
Email ID : accounts@nationalfitting.com, Website : www.nationalfitting.com
Ph : 9943293000 / 9943993001

SUMMARY OF AUDITED FINANCIAL RESULTS FOR THE QUARTER / YEAR ENDED 31ST MARCH' 2023.

CIN : L29199TZ1993PLC008034 (Rs. in Lakhs)

| Particulars | Unaudited | Audited | |
|---|---|---|---|
| | Quarter ended | Year ended | |
| | 31.03.2023 | 31.03.2023 | 31.03.2022 |
| Total income from operations (net) | 2085.46 | 8602.14 | 6629.96 |
| Net Profit / (Loss) from ordinary activities before tax * | 165.04 | 656.67 | 167.27 |
| Net Profit / (Loss) from ordinary activities after tax * | 74.08 | 439.03 | 134.29 |
| Total Comprehensive Income for the period | 14.08 | 14.08 | (0.49) |
| Net Profit after other Comprehensive Income | 59.99 | 424.94 | 134.79 |
| Equity Share Capital | 908.32 | 908.32 | 908.32 |
| Other Equity (excluding Revaluation Reserve) | 4586.40 | 4586.40 | 4,252.29 |
| Earnings Per Share (of ` 10/- each) Basic and Diluted | 0.66 | 4.68 | 1.48 |

* The Company does not have any extraordinary item to report for the above periods.

**Notes :**

1. The above result has been reviewed by Audit Committee and approved by the Board of Directors at their respective meetings held on **22.05.2023.**
2. The above is an extract of the detailed format of Quarterly / Year ended Financial Results filing with Stock Exchange under regulation 33 of the SEBI (Listing and other disclosure requirements) Regulations, 2015. The Full format of the Quarterly / Year ended Financial Results are available on the Stock Exchange websites : www.bseindia.com

**For National Fittings Limited**

**Sd/- A.V.PALANISWAMY**
Managing Director
DIN:01817391

Place : Coimbatore
Date : 22.05.2023


# ஊட்டி மலர்க் கண்காட்சியில் காணாமல் போன 15 குழந்தைகள் மீட்பு

**ஊட்டி, மே 23**

நீலகிரி மாவட்டத்தில் கோடை விழாவையொட்டி ஊட்டி அரசு தாவரவியல் பூங்காவில் 125வது மலர் கண்காட்சி நடைபெற்று வருகிறது.

இதனை கண்டு ரசிக்க கேரளா, கர்நாடகா உள்ளிட்ட வெளிமாநிலங்கள் மற்றும் தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் இருந்து சுற்றுலா பயணிகள் குவிந்து உள்ளனர்.

தற்போது கோடை விடுமுறை என்பதால், அவர்கள் தங்களது குழந்தைகள், உறவினர்களுடன் வந்து செல்கிறார்கள்.

கண்காட்சியில் இடம்பெற்ற பிரமாண்ட மயில் சிற்பம் மற்றும் சிறப்பு அலங்காரங்களை கண்டு ரசித்து வருகின்றனர்.தொடர்ந்து பூங்கா பெரிய புல்வெளி மைதானத்தில் சுற்றுலா பயணிகள் அமர்ந்து ஓய்வெடுக்கிறார்கள்.

அங்குள்ள புல்வெளியில் குழந்தைகள் பலூன்கள், பந்துகளை வைத்து ஓடி விளையாடுகின்றனர்.

அவ்வாறு விளையாடும் குழந்தைகள் பெற்றோர் இருக்கும் இடம் தெரியாமல், நீண்ட தூரம் சென்று விடுகின்றனர். பூங்காவில் சுற்றுலா பயணிகள் கூட்டம் அதிகமாக இருப்பதால், சில குழந்தைகள் காணாமல் சென்றனர்.

தொட ர்ந்து பெற்றோர்கள் பூங்காவில் அக்கம் பக்கத்தில் தேடி பார்த்தும் கிடைக்கவில்லை. மேலும் அவர்கள் ஊட்டி போலீசில் புகார் அளித்தனர். அதன் பேரில் போலீசார் தாவரவியல் பூங்காவில் சுற்றுலா பயணிகள் கூட்டத்திற்கு மத்தியில், காணாமல் போன குழந்தைகளின் பெயர், அணிந்திருக்கும் உடை, அடையாளங்களை கூறி மைக்கில் அறிவிப்பு வெளியிட்டனர். பின்னர் குழந்தைகளை மீட்டு பெற்றோரிடம் ஒப்படைத்தனர்.

இதுகுறித்து போலீசார் கூறியதாவது:

கர்நாடக மாநிலம் மைசூரை சேர்ந்த ஐ.டி. ஊழியர்களான சுரேஷ்லட்சுமி தம்பதியின் 1½ வயது குழந்தை நேற்று முன்தினம் பூங்காவில் காணாமல் போனது.

தொடர்ந்து விழா மேடையில் உள்ள பெரிய திரையில் குழந்தையின் புகைப்படத்தை வெளியிட்டு, குழந்தையை மீட்டு பெற்றோரிடம் ஒப்படைத்தோம்.

குழந்தையை வாங்கிய பெற்றோர், அன்பு முத்தம் கொடுத்து மகிழ்ந்த காட்சி அங்கிருந்தவர்களை நெகிழ வைத்தது.

இதேபோல் மலர் கண்காட்சி தொடங்கிய 3 நாட்களில் மட்டும் காணாமல் போன 15 குழந்தைகளை மீட்டு பெற்றோரிடம் ஒப்படைத்து உள்ளோம்.

மேலும் மைசூரை சேர்ந்த தம்பதி தவறவிட்ட 2 பவுன் நகை, மற்றும் 5 செல்போன்கள் மீட்கப்பட்டு உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. இவ்வாறு அவர்கள் கூறினர்.

## இந்தியாவின் கோரிக்கையை ஏற்று,

# 1474 செயலிகளுக்கு ஆப்பிள் நிறுவனம் தடை

**புதுடெல்லி, மே 23**

இந்தியா உள்பட பல்வேறு நாடுகள் வைத்த கோரிக்கையை ஏற்று ஆப்பிள் நிறுவனம் 1474 செயல்களை தடை செய்துள்ளது. இதனை அடுத்து ஆப்பிள் பிளே ஸ்டோரில் இருந்து 1474 செயலிகள் நீக்கப்பட்டுள்ளது.

2022 ஆம் ஆண்டில் இந்தியா உள்பட பல நாடுகளில் அரசாங்கங்களின் கோரிக்கையின் பேரில் ஆப்பிள் அதன் ஆப் ஸ்டோரில் இருந்து 1474 செயலிகளை தடை செய்துள்ளது. இந்த செயலிகளில் பெரும்பாலானவை சீனா செயலிகள் என்பது குறிப்பிடத்தக்கது. 14 செயலிகளை நீக்குமாறு இந்தியா கோரிக்கை விடுத்த நிலையில், பாகிஸ்தான் அரசு 10 செயலிகளை நீக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளது.

தடைசெய்யப்பட்ட செயலிகள் உள்ளூர் சட்டங்களை மீறுதல், தீங்கிழைக்கும் உள்ளடக்கம் அல்லது மோசடி நோக்கங்களுக்காகப் பயன்படுத்துதல் உள்ளிட்ட பல்வேறு காரணங்களுக்காக அகற்றப்பட்டன. ஆப்பிள் தனது ஆப் ஸ்டோரிலிருந்து பயன்பாடுகளை அகற்றுவதற்கான அரசாங்க கோரிக்கைகளுக்கு இணங்குவதைக் கொள்கையாகக் கொண்டுள்ளது. மேலும் அதன் பயனர்களைப் பாதுகாப்பதற்காகவும் ஆப் ஸ்டோர் ஒரு பாதுகாப்பான தளமாக இருப்பதை உறுதிசெய்யவும் இவ்வாறு செய்கிறது.

ஆப் ஸ்டோரில் இருந்து இந்தப் பயன்பாடுகளை அகற்றியதற்கு கலவையான எதிர்வினைகளை சந்தித்துள்ளது. ஆப்பிள் அதன் பயனர்களைப் பாதுகாக்க நடவடிக்கை எடுத்ததற்காக சிலர் பாராட்டியுள்ளனர். ஆனால் சிலர் ஆப்பிள் நிறுவனத்தை கடுமையாக விமர்சித்துள்ளனர். இந்த பயன்பாடுகளை அகற்றுவது, அவை இணையத்தில் இருந்து முற்றிலும் அகற்றப்பட்டுவிட்டன என்று அர்த்தமல்ல என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும் என்றும், தடை செய்யப்பட்ட செயலிகள் இன்னும் பிற ஆப் ஸ்டோர்களில் அல்லது பிற இணையதளங்களில் கிடைக்கின்றன என்பதை ஆப்பிள் புரிந்து கொள்ள வேண்டும் என்றும் தெரிவித்துள்ளனர்.

சீன அரசு கேட்டு கொண்டதால் 1435 செயலிகளும், இந்திய அரசு கேட்டு கொண்டதால் 14 செயலிகளும், பாகிஸ்தான் அரசு கேட்டு கொண்டதால் 10 செயலிகளும் என மொத்தம் 1474 செயலிகள் கடந்த ஆண்டு ஆப்பிள் ஆப் ஸ்டோரில் இருந்து நீக்கப்பட்டுள்ளன.



திருப்பூர் மாநகராட்சி ஆணையாளர் பவன்குமார் ஜி.கிரியப்பனவர் தலைமையில் மைய அலுவலக கூட்டரங்கில் தனியார் செப்டிக் டேங்க் உரிமையாளர்களுடன் துப்புரவு பணியாளர்களின் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. உடன் துணை ஆணையாளர் சுல்தானா, மாநகர நல அலுவலர் கௌரிசரவணன், மாநகர பொறியாளர் வெங்கடேஷ் உட்பட பலர் உள்ளனர்.

## வால்பாறை கோடை விழா: புகைப்பட போட்டியில் பங்கேற்க மாவட்ட ஆட்சியர் அழைப்பு

கோவை, மே 23

வால்பாறை கோடை விழாவை முன்னிட்டு கோவை மாவட்டத்தின் இயற்கை, பண்பாடு, வரலாற்றுச் சின்னங்கள் மற்றும் நிகழ்ச்சிகள் குறித்த புகைப்படங்களைக் கொண்டு ஆன்லைன் புகைப்படப் போட்டியில் கலந்து கொள்ளலாம் என்று மாவட்ட ஆட்சியர் அறிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது:

வால்பாறை கோடை விழா 2023ஐ முன்னிட்டு ஆன்லைன் புகைப்படப் போட்டி நடைபெறவுள்ளது. ஆர்வமுள்ளவர்கள் இப்போட்டியில் கலந்து கொள்ளலாம். கோயம்புத்தூர் மாவட்ட நிர்வாகம் சார்பில் வால்பாறை அரசு மேல்நிலைப்பள்ளி வளாகத்தில், வால்பாறை கோடை விழா 2023 வருகின்ற 26ம் தேதி முதல் 28ம் தேதி வரை நடைபெறவுள்ளது.

இவ்விழாவின் ஒரு பகுதியாக ஆன்லைன் புகைப்படப் போட்டி நடைபெறவுள்ளது. புகைப்படங்களின் கருத்து (Theme) பின்வருவனவற்றில் ஏதேனும் ஒன்றாக இருக்கலாம்:

1. கோயம்புத்தூர் மாவட்டத்தின் தாவரங்கள்/விலங்குகள்,
2. கோயம்புத்தூர் மாவட்டத்தின் கலை/பண்பாடு/விழாக்கள்
3. கோயம்புத்தூர் மாவட்டத்தின் இயற்கைக் காட்சிகள்/வரலாற்றுச் சின்னங்கள்

போட்டியாளர்கள் தங்களது புகைப்படங்களை jpg வடிவில் (jpg format) 25ம் தேதி இரவு 10 மணிக்குள் தங்களது விவரங்களுடன் summerfestivalvalparai2023@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு புகைப்படங்களை அனுப்பிட வேண்டும்.

இப்போட்டியில் வெற்றி பெறுபவர்களுக்கு முதல் பரிசாக ரூ.3000, இரண்டாம் பரிசாக ரூ.2000, மூன்றாம் பரிசாக ரூ.1000மும் வழங்கப்படவுள்ளது. இப்போட்டிக்காக சமர்ப்பிக்கப்பட்ட புகைப்படங்கள் கோடை விழாவின் புகைப்படக் கண்காட்சி யில் பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்படும். எனவே, ஆர்வமுள்ளவர்கள் இப்போட்டியில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இவ்வாறு மாவட்ட ஆட்சித் தலைவர் அறிவித்துள்ளார்.

## கருமுத்து கண்ணன் மறைவு: முதல்வர் ஸ்டாலின் இரங்கல்

சென்னை, மே 23



மதுரை மீனாட்சி அம்மன் கோயில் தக்கார் கருமுத்து கண்ணனின் மறைவுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இரங்கல் தெரிவித்துள்ளார்.

மதுரை மீனாட்சி அம்மன் கோயிலில் கருமுத்து கண்ணன் 18 ஆண்டுகளாக தக்காராக இருந்தவர்.

இவர் கடந்த சில நாட்களாகவே உடல் நிலை பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், இன்று சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இவருடைய மறைவு சோகத்தை ஏற்படுத்தியுள்ள நிலையில், அரசியல் பிரபலங்கள், மக்கள் என பலரும் தங்களுடைய இரங்கலை தெரிவித்து வருகிறார்கள்.

அந்த வகையில், தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தனது இரங்கலை தெரிவித்துள்ளார்.

## யுஜடி கல்லூரிக்கு 'ஏ பிளஸ் நாக்' அங்கீகாரம்

கோவை, மே 23

கோவை அருகே பெரியநாயக்கன்பாளையத்தில் செயல்பட்டு வரும் (UIT) யுனைடெட் கல்விக் குழுமங்களின் முதன்மை கல்வி நிறுவனமான யுனைடெட் தொழில்நுட்பக் கல்லூரி, NAAC- தேசிய தர மதிப்பீட்டுக் குழுவினரால், கல்வியின் கல்வி தர மேம்பாடு, கட்டமைப்பு வசதிகள் ஆகியவற்றை மதிப்பீடு செய்து நாக் ஏ பிளஸ் (NAAC A+CGPA 3.4/4.O) அங்கீகாரத்தை வழங்கி உள்ளது.

வரும் கல்வி ஆண்டில் தன்னாட்சி பெறுவதற்கான முதல் அளவுகோல் இந்த அங்கீகாரம் என்பது குறிப்பிடத்தக்கது.

இத்தகவலை கல்லூரி நிறுவனர் சண்முகம், முதல்வர் முனைவர் ராதாகிருஷ்ணன் ஆகியோர் தெரிவித்தனர்.

## நீண்ட கால செல்வத்தை உருவாக்க ஐசிஐசிஐயின் டெப்ட் பண்ட்கள் அறிமுகம்

மதுரை, மே 23

ஐசிஐசிஐ ப்ருடென்ஷியல் லைஃப் இன்சூரன்ஸ், டெப்ட் ஃபண்ட் ஐ அறிமுகப்படுத்தியுள்ளது.

நடைமுறையில் உள்ள இந்த வட்டி விகித திட்டமுறையானது, வாடிக்கையாளர்களுக்கு டெப்ட் ஃபண்ட் இல் முதலீடு செய்வதற்கான சிறந்த வாய்ப்பான மற்றும் ஆயுள் காப்பீட்டு சந்தையில் இதுபோன்ற முதல் ஃபண்ட் ஆன ICICI ப்ரு கான்ஸ்டன்ட் மெச்சூரிட்டி ஃபண்ட் ஐ வழங்குகிறது.

ICICI ப்ரு சிக்னேச்சர், ICICI ப்ரு ஸ்மார்ட் லைஃப் மற்றும் ICICI ப்ரு லைஃப் டைம் கிளாசிக் போன்ற இந்த நிறுவனத்தின் யூலிப் வழங்கல்கள் மூலம் இந்த ஃபண்டில் முதலீடு செய்யும் விருப்பத்தை வாடிக்கையாளர்கள் கொண்டுள்ளார்கள். இந்த திட்டங்களை வாங்க வாடிக்கையாளர்கள் ஆலோசகர்களை அல்லது நிறுவனத்தின் இணையதளத்தை (www.iciciprulife.com <http://www.iciciprulife.com/> ) பார்வையிடலாம்.

ICICI புருடென்ஷியல் லைஃப் இன்சூரன்ஸ் இன் திட்டங்களின் தலைவர் ஸ்ரீனிவாஸ் பாலசுப்ரமணியன் கூறியதாவது: வாடிக்கையாளர்களுக்கு இந்த தொழில்துறையின் அதன் வகையின் முதல் டெப்ட் ஃபண்ட் ஐ வழங்கு வதில் மகிழ்ச்சியடைகிறோம். ஐசிஐசிஐ ப்ரு கான்ஸ்டன்ட் மெச்சூரிட்டி ஃபண்ட் எங்களின் இணைக்கப்பட்ட சேமிப்புத் திட்டங்களுடன் கிடைக்கும். வாடிக்கை யாளர்கள் தங்கள் பிரீமியங்களை இந்த ஃபண்டில் முத லீடு செய்து, தற்போதைய நடைமுறையிலுள்ள அதிக வட்டி விகிதங்களைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

நீண்ட காலத்திற்கு தங்கள் முதலீடுகளை முடக்கலாம் என்றார். இந்த ஃபண்ட் நிறுவனத்தின் முதன்மையான யூனிட்இணைக்கப்பட்ட காப்பீட்டுத் திட்டங்களுடன் (ULIP) முதலீடுகளுக்குக் கிடைக்கிறது. ULIPகள் வாடிக்கையாளர்களுக்கு, ஆயுள் காப்பீடு, குடும்பத்திற்கான நிதிப் பாதுகாப்பு ஆகியவற்றை ஒரு தனித்துவமான முன்மொழிவுடன் வழங்குகிறது மற்றும் நீண்ட காலத்திற்கு செல்வத்தை உருவாக்க உதவுகிறது.

## சங்ககிரி பகுதியில் பலத்த காற்றுடன் மழை: கூரை சரிந்து விழுந்து விவசாயி பலி

சேலம், மே 23

சேலம் மாவட்டம், சங்ககிரி தாலுகா, தேவூர், அரிசிராமணி சுற்று வட்டார பகுதிகளில் நேற்று மாலை திடீரென ஒரு மணி நேரத்துக்கும் மேலாக கனமழை பெய்தது. இதனால் தாழ்வான பகுதிகளில் தண்ணீர் தேங்கி நின்றது. சங்ககிரி நகரில் மழை காரணமாக மின்தடை ஏற்பட்டது. பலத்த காற்றுடன் கூடிய கன மழை காரணமாக மாமரத்துகாடு பகுதியை சேர்ந்த விவசாயி ஆறுமுகம் (வயது 56) என்பவரது மேற்கூரை சரிந்து விழுந்ததில் அவர் உயிரிழந்தார். இவரது மனைவி சுந்தராம்பாள் கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு இறந்துவிட்டார்.

இத்தம்பதிக்கு 3 மகன்களும், ஒரு மகளும் உள்ளனர். மழையின்போது மேற்கூரை சரிந்து விழுந்து விவசாயி உயிரிழந்த விவகாரம் குறித்து சங்ககிரி வருவாய் துறையினர், தேவூர் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

## மரத்தில் இருந்து தவறி விழுந்து மாணவர் பலி

நாமக்கல், மே 23

நாமக்கல் மாவட்டம், ராசிபுரம் அருகே உள்ள குள்ளப்பநாயக்கன்பட்டி பகுதியை சேர்ந்தவர் விஜயகுமார் மகன் தீபக் (வயது 18). இவர், பிளஸ் 2 தேர்ச்சி பெற்று கல்லூரி படிப்புக்கு செல்ல இருந்தார்.

இந்நிலையில், தீபக், நேற்று, தனது வீட்டின் அருகே உள்ள தோட்டத்தில் உள்ள மரத்தில் ஏறி, கொய்யாக்காய் பறிக்க முயன்றார்.

அப்போது, எதிர்பாராதவிதமாக தவறி கீழே இருந்த கிணற்றில் விழுந்தார். தீபக்கிற்கு நீச்சல் தெரியாததால், நீரில் மூழ்கி தத்தளித்தார்.

இதுகுறித்து ராசிபுரம் தீயணைப்பு நிலையத்துக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.

அதன்பேரில் தீயணைப்பு வீரர்கள் சம்பவ இடத்துக்கு சென்று மீட்பு பணியில் ஈடுபட்டனர். ஆனால், அதற்குள் தீபக் நீரில் மூழ்கி உயிரிழந்தார்.

அதைத் தொடர்ந்து அவரது சடலத்தை மீட்டு, பிரேத பரிசோ தனைக்காக ராசிபுரம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தனர்.

இதுகுறித்து புதுச்சத்திரம் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## புதிய திமுக உறுப்பினர்களை சேர்க்கும் பணியில் மும்முரமாக ஈடுபட வேண்டும்

### நிர்வாகிகளுக்கு நா.கார்த்திக் அழைப்பு

கோவை, மே 23

கோவை மாநகர் மாவட்ட திமுக செயலாளர் நா.கார்த்திக் (முன்னாள் எம்.எல்.ஏ.) வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது:

கடந்த 22.03.2023 அன்று, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில், சென்னை அண்ணா அறிவாலயத்தில், கலைஞர் அரங்கில் நடைபெற்ற திமுக மாவட்ட செயலாளர்கள் கூட்டத்தில் கட்சியில் ஏற்கனவே ஒரு கோடி உறுப்பினர்கள் இருக்கும் நிலையில், திமுகவை மேலும் வலுப்படுத்த, மேலும் ஒரு கோடி உறுப்பினர்களை சேர்க்கும் மாபெரும் முன்னெடுப்பு தொடங்கப்பட்டுள்ளது.

ஏப்ரல் 3 ம் தேதி இந்த திட்டம் தொடங்கப்பட்டு, கலைஞர் பிறந்த நாளான ஜூன்



3ம் தேதிக்குள் நிறைவேற்றிட தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மாவட்ட செயலாளர்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட மேற்கண்ட தீர்மானத்தின் படி, கழகத்தை மேலும் வலுப்படுத்த புதிய உறுப்பினர்களை சேர்க்கும் மாபெரும் முன்னெடுப்பில், கோவை மாநகர் மாவட்டக் கழகத்தின் திமுக நிர்வாகிகள், தலைமைக்கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதிக்கழகச் செயலாளர்கள், மண்டலத் தலைவர்கள், நிலைக்குழுத் தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள், மாவட்ட அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், வட்டக்கழக செயலாளர்கள், பகுதிக் கழக நிர்வாகிகள், வட்டக் கழக நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள்,பாக முகவர்கள், செயல்வீரர்கள், கழகத் தொண்டர்கள் அனைவரும்,

அவரவர் வசிக்கும் பகுதியில் உள்ள பூத்தில் புதிய உறுப்பினர்களை சேர்க்கும் மாபெரும் முன்னெடுப்பில் முன்னின்று பணியாற்றிட வேண்டும் என்று அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## 'ஆர்ஆர்ஆர்' பட நடிகர் ரே ஸ்டீவன்சன் காலமானார்

மும்பை, மே 23



ராஜமவுலி இயக்கத்தில் ஜூனியர் என்.டி.ஆர், ராம் சரண், ஆலியா பட், ஸ்ரேயா, சமுத்திரக்கனி உட்பட பலர் நடித்து சூப்பர் ஹிட்டான படம், 'ஆர்ஆர்ஆர்'. தமிழ், தெலுங்கு, இந்தி உள்பட 5 மொழிகளில், மார்ச் 25ம் தேதி வெளியான இந்தப் படம், ரூ.1,150 கோடிக்கு மேல் வசூல் ஈட்டியது.

இந்தப் படத்தில் வரும் 'சர் ஸ்காட்' என்ற ஆங்கிலேயர் கேரக்டரில் நடித்தவர் நடிகர் ரே ஸ்டீவன்சன்.

'ஆர்ஆர்ஆர்' படத்தில் ஸ்டீவன்சன் ஏற்று நடித்திருந்த எதிர்மறையான பாத்திரமும், அவரின் நடிப்பும் வரவேற்பைப் பெற்றது. மார்வெலின் 'தோர்', பிரபல வெப் சீரிஸான 'வைக்கிங்ஸ்' போன்றவற்றிலும் நடித்துள்ளார்.

மே 25, 1964 இல், வடக்கு அயர்லாந்தின் லிஸ்பனில் பிறந்த ஸ்டீவன்சன், 1990களின் முற்பகுதியில் ஐரோப்பிய தொலைக்காட்சி தொடர்கள் மற்றும் டெலிஃபிலிம்களில் நடித்ததன் மூலம் சினிமா வாழ்க்கையில் அடியெடுத்துவைத்தார்.

இத்தாலியில் அவர் காலமானார் என்று தகவல் வெளியாகியுள்ளது. அவரின் மரணம் குறித்த கூடுதல் தகவலும் வெளியாகவில்லை. அவர் மறைவுக்கு இரங்கல் தெரிவித்துள்ள 'ஆர்ஆர்ஆர்' படக் குழு, "அனைவருக்கும் அதிர்ச்சியளிக்கும் செய்தி! ரே ஸ்டீவன்சன், நிம்மதியாக ஓய்வெடுங்கள். நீங்கள் எங்கள் இதயங்களில் SIR SCOTTஆக என்றென்றும் இருப்பீர்கள்" என்று பதிவிட்டுள்ளது.



கோவை மாநகர காவல்துறை மோப்பநாய் பிரிவில் அவைகளை கையாள பெண் காவலர்கள் கவிப்பிரியா, பவானி ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

## பெருந்துறை கொங்கு ஐடிஐ மாணவருக்கு அமைச்சர்கள் பாராட்டு

ஈரோடு மே 23

பெருந்துறை கொங்கு பாலிடெக்னிக் கல்லூரி வளாகத்தில் கொங்கு ஐடிஐ செயல்பட்டு வருகிறது. இந்த ஐடிஐயில் பயிலும் இரண்டாமாண்டு மாணவர் .ஆ.கோகுல் சென்னையில் தமிழ்நாடு அரசு நடத்திய திறன் மேம்பாட்டு போட்டியில் கலந்து கொண்டார. அவரது புதிய கண்டு பிடிப்பை, தமிழக இளைஞர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள் க.பொன்முடி, சி.வி.கணேசன் மற்றும் திறன் மேம்பாட்டுக் கழகத்தின் இயக்குநர் இன்னசன்ட் திவ்யா ஆகியோர் பாராட்டினர்.



கோகுல் " வீட்டு தொட்டி யிலிருந்து தண்ணீர் செல்லும் குழாயிலிருந்து மின்சாரம் தயாரிக்கும் முறையை" தமிழ்நாடு அரசு திறன் மேம்பாட்டு கழகம் நடத்திய போட்டியில் செயல்முறையை சமர்ப்பித்தார். இப்போட்டியில் மாநிலம் முழுவதிலிருந்தும் 170 ஆய்வறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டது. அதில் கோகுல் உட்பட 13 மாணவர்கள் மாநில அளவில் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இவரது சொந்த ஊர் பெருந்துறையை அடுத்த விஜயமங்கலம் ஆகும். தந்தை மூர்த்தி விசைத்தறி கூடத்தில் கூலி வேலை செய்து வருகிறார். சீனாபுரம் அரசு மாதிரி மேல்நிலைப் பள்ளியில் பத்தாம் வகுப்பு வரை பயின்றார். இவரின் ஆய்வறிக்கை நமது வீட்டு உபயோகப் படுத்தும் குடிநீர் குழா யிலிருந்து மின்சாரம் தயாரிக்கும் முறை ஆகும். குடிநீர் குழாயில் ஒரு டர்பைனை பொருத் துவதன் மூலம் மின்சாரம் பெறப்படுகிறது. டர்பைன் சுழலும் போது அதன் மூலம்ஜெனரேட்டர் பயன்படுத்தி மின்சாரம் சேமித்து வைத்து அந்த மின்சாரத்தை வீட்டுக்கு உபயோகப்படுத்திக் கொள்ளலாம். மின் செலவு அதிகமாக வரும் காலக் கட்டங்களில் எளிமையான மின்சாரம் தயாரிக்கும் முறை. பரிசு பெற்ற மாணவரை கொங்கு பாலிடெக்னிக் கல்லூரி மற்றும் கொங்கு ஐடிஐ தாளாளர் வெங்கடாச்சலம் பாராட்டினார். இந்நிகழ்வில் கொங்கு ஐடிஐ முதல்வர் தினேஸ்குமார், கொங்கு பாலிடெக்னிக் கல்லூரி முதல்வர் முனைவர் .ஏ.வேதகிரி ஈஸ்வரன் மற்றும் ஐடிஐ ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

## 2 ஆயிரம் ரூபாய் நோட்டுகளை வங்கிகளில் மாற்றுவது தொடங்கியது - கூட்டம் இல்லை

சென்னை, மே 23



2000 ரூபாய் நோட்டுகளை திரும்ப பெறுவதாக ரிசர்வ் வங்கி கடந்த வெள்ளிக்கிழமை அறிவித்தது. 2000 ரூபாய் நோட்டுகளை வைத்திருப்பவர்கள் மே 23ந்தேதி அனைத்து வங்கிகளிலும் அதை கொடுத்து மாற்றிக் கொள்ளலாம் அல்லது டெபாசிட் செய்யலாம் என்று அறிவிக்கப்பட்டது. இதற்காக செப்டம்பர் 30ந்தேதி வரை கால அவகாசமும் வழங்கப்பட்டுள்ளது. 2000 ரூபாய் நோட்டுகளை மாற்றும் நடவடிக்கை இன்று தொடங்கியது.

இதற்காக அனைத்து வங்கிகளிலும் ஏற்பாடுகள் செய்யப்பட்டு இருந்தன. 2000 ரூபாய் நோட்டுகளை மாற்ற வருபவர்களுக்கு வங்கிகளில் உரிய வசதி செய்து கொடுக்கப்பட வேண்டும் என்று ரிசர்வ் வங்கி கூறி இருந்தது. அதை ஏற்று பெரும்பாலான வங்கிகளில் 2000 ரூபாய் நோட்டுகளை மாற்ற தனி இட வசதி உருவாக்கப்பட்டு இருந்தது. சில வங்கிகளில் மக்கள் கூட்டமாக வரலாம் என்று கருதி தனி வரிசை அமைத்து கொடுத்து இருந்தனர்.

வங்கிக்கு வருபவர்களின் தாகத்தை தீர்ப்பதற்கு தண்ணீர் வசதியும் செய்து கொடுக்கப்பட்டு இருந்தது. தற்போது 2000 ரூபாய் நோட்டுகள் திரும்ப பெறப்படும் என்று மட்டுமே அறிவிக்கப் பட்டு உள்ளது. செல்லாது என்று அது அறிவிக்கப்படவில்லை. இதன் காரணமாக வங்கிகளுக்கு 2000 ரூபாய் நோட்டுகளுடன் வந்தவர்களின் எண்ணிக்கை மிக குறைவாகவே இருந்தது.

கோவையில் பல வங்கிகளில் இன்று காலை நிலவரப்படி எதிர்பார்த்த அளவுக்கு கூட்டம் இல்லை. 2000 ரூபாய் நோட்டுகளை மாற்றிக் கொள்ள அவகாசம் நீட்டிக்கப்படலாம் என்பதால் மக்கள் மத்தியில் எந்த அவசரமும் காணப்படவில்லை என்பதை பார்க்க முடிந்தது. 2000 ரூபாய் நோட்டுகளை மாற்ற கணக்கு வைத்திருக்க வேண்டும் என்ற அவசியமில்லை. விண்ணப்பம் ஏதும் பூர்த்தி செய்து கொடுக்க வேண்டிய அவசியமும் இல்லை என்று கூறப்பட்டு இருந்ததால் பொதுமக்கள் மிக எளிதாக 2000 ரூபாய் நோட்டுகளை மாற்றி சென்றனர். மொத்தமாக அதிகளவு 2000 ரூபாய் நோட்டுகளுடன் வந்தவர்களிடம் மட்டுமே அடையாள அட்டை கேட்கப்பட்டது.

## கோவையில் தீயில் கருகி மூதாட்டி பலி

கோவை, மே.23

கோவை ரத்தினபுரி சாஸ்திரி ரோட்டை சேர்ந்தவர் ராஜம்மாள்(75). இவர் கடந்த 7ம் தேதி தண்ணீர் சூடு செய்வதற்காக மண்ணெண்ணெய் ஸ்டவ்வை பற்ற வைத்தார். அப்போது எதிர்பாராத விதமாக அவரது சேலையில் தீப்பிடித்தது. பின்னர் மள, மளவென தீ உடல் முழுவதும் பரவியது. வலியால் அவர் துடித்தார். சத்தம் கேட்டு வந்த அக்கம்பக்கத்தினர் பலத்த தீக்காயமடைந்த அவரை மீட்டு கோவையில் உள்ள தனியார் மருத்துவ மனையில் சேர்த்தனர். டாக்டர்கள் அவருக்கு தீவிர சிகிச்சை அளித்து வந்தனர். ஆனால் அவர் சிகிச்சை பலனளிக்காமல் நேற்று பரிதாபமாக உயிரிழந்தார். ரத்தினபுரி போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.


### பெயர் மாற்றம்

யுவராஜ் சிதம்பரம், (Yuvaraj Chidamparam), த/பெ. சிதம்பரம், பிறந்த தேதி : 19.06.1984, (சொந்த மாவட்டம் : ஈரோடு), 251–A, வெங்கமேட்டுபுதூர், பெரியவட்டம் (அஞ்சல்), ஆவுடையார்பாறை, ஈரோடு – 638151, என்ற விலாசத்தில் வசித்து வரும் நான் இனிமேற் கொண்டு **யுவராஜ் (அசல் பெயர்) சிதம்பரம் (துணைப் பெயர்) YUVARAJ (GIVEN NAME) CHIDHAMBARAM (SURNAME)** என அழைக்கப்படுவேனாகவும்.

யுவராஜ் சிதம்பரம்,
(Yuvaraj Chidamparam)

### பெயர் மாற்றம்

கவிதா (அசல் பெயர்) இந்திரமூர்த்தி (துணைப் பெயர்), Kavitha (Given Name) Indiramoorthy (Surname), த/பெ. முருகேசன், பிறந்த தேதி : 01.02.1977, (பிறப்பிடம் : பொள்ளாச்சி, கோயமுத்தூர் மாவட்டம், தமிழ்நாடு), எண்.8, திருமகள் நகர், அரசு மருத்துவமனை, மேல்நிலைப்பள்ளி எதிரில், புதூர், ஆலாந்துறை, கோயமுத்தூர் – 641101, தமிழ்நாடு, என்ற விலாசத்தில் வசித்து வரும் நான் இனிமேற் கொண்டு **கவிதா (அசல் பெயர்) முருகேசன் (துணைப் பெயர்) KAVITHA (GIVEN NAME) MURUGESAN (SURNAME)** என அழைக்கப்படுவேனாகவும்.

கவிதா (அசல் பெயர்)
இந்திரமூர்த்தி (துணைப் பெயர்)

**மாண்புமிகு 4வது கூடுதல் மாவட்ட நீதிமன்றம், கோவை**
**M.C.O.P.No.47/2021**

சுதா, க/பெ.ராஜேந்திரன். –மனுதாரர்

–எதிர்–

மணிகண்டன், த/பெ.குப்புசாமி, எண்.கே.3வது பிளாக், மார்டின் அப்பார்ட்மெண்ட், செல்வபுரம், கோயமுத்தூர் – 641 026. – 1ம் எதிர்மனுதாரர்

**அறிவிப்பு**

மேற்படி மனுதாரர் மோட்டார் வாகன விபத்தில் ஏற்பட்ட காயங்களுக்கான இழப்பீடு கோரி தாக்கல் செய்துள்ள மேற்படி மனுவானது வருகின்ற 04.07.2023 அன்று வாய்தா போடப்பட்டுள்ளது. அன்று காலை 10.30 மணிக்கு மேற்படி எதிர்மனுதாரர்களாகிய தாங்கள் நேரிலோ, வழக்கறிஞர் மூலமாகவோ ஆஜராகி தங்களது ஆட்சேபணையை தெரிவித்துக் கொள்ளவும். தவறும் பட்சத்தில் மேற்படி மனுவானது ஒருதலை பட்சமாக தீர்மானிக்கப்படும் என்பதை அறியவும்.

**K.Manikandan, B.A., B.L.,**
**Advocate, Coimbatore.**

**மாண்புமிகு இரண்டாவது கூடுதல் சார்பு நீதிமன்றம், கோயமுத்தூர்**
**H.M.O.P.No.256 of 2022**

R.ரம்யா. –மனுதாரர்

–எதிர்–

S.பாபு, த/பெ.சனாவுல்லா, கதவு எண்.6/7, புதிய நெ.31, 1வது கிராஸ், ஸ்ரீபதி நகர், நஞ்சுண்டாபுரம் ரோடு, ராமநாதபுரம், கோயமுத்தூர் – 641045.
அலுவலக முகவரி: CMC Group of Institutions Corporation, No.22-B, முதல் தளம், கன்னிகா பரமேஸ்வரி வீதி, நஞ்சுண்டாபுரம் ரோடு, இராமநாதபுரம், கோயமுத்தூர் – 641045. – எதிர்மனுதாரர்

**அறிவிப்பு**

மனுதாரர் எதிர்மனுதாரரிடமிருந்து விவாகரத்து கோரி வழக்கு தொடர்ந்துள்ளார். அது கோயமுத்தூர் இரண்டாவது கூடுதல் சார்பு நீதிமன்றத்தில் H.M.O.P.No.256/2022 ஆக கோப்பிற்கு எடுக்கபட்டு நிலுவையில் இருந்து வருகின்றது. மேற்படி மனுவானது வருகின்ற 15.06.2023ம் தேதியன்று எதிர்மனுதாரர் நேரில் முன்னிலையாக வாய்தா போடப்பட்டுள்ளது. எனவே, எதிர்மனுதாரராகிய தாங்கள் மேற்படி தேதியில் காலை 10.00 மணிக்கு மாண்புமிகு இரண்டாவது கூடுதல் சார்பு நீதிமன்றம் (II ASJ) நேரில் ஆஜராகி தங்கள் ஆட்சேபணையை தெரிவித்துக் கொள்ளலாம். தவறும் பட்சத்தில் ஒருதலைப்பட்சமாக தீர்ப்பு செய்யப்படும் என்பதை அறியவும்.

(நீதிமன்ற ஆணைப்படி)

**C.Kannan, B.A., B.L.,**
**Advocate (MS.1604/2006)**

# சிறுபான்மையினருக்கான கடன் திட்டங்கள்: பயன்பெற கோவை ஆட்சியர் அழைப்பு

கோவை, மே 23

தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டு கழகம் மூலம் செயல்படுத்தப்படும் கடன் திட்டங்களான தனிநபர் கடன், சுய உதவி குழுக்களுக்கான சிறுதொழில் கடன், கைவினைக் கலைஞர்களுக்கு கடன், கல்விகடன் திட்டம் ஆகிய திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன என்று கோவை மாவட்ட ஆட்சியர் கிராந்திகுமார் பாடி தெரிவித்துள்ளார்.


இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

திட்டம் 1ன் கீழ் பயன்பெற குடும்ப ஆண்டு வருமானம் நகர்ப்புறமாயின் ரூ.1,20,000/க்கு மிகாமலும், கிராமப்புறமாயின் ரூ.98,000/ மிகாமலும் இருத்தல் வேண்டும்.

திட்டம் 2ன் கீழ் பயன்பெற குடும்ப ஆண்டு வருமானம் ரூ.8,00,000/க்கு மிகாமல் இருத்தல் வேண்டும். திட்டம் 1ன் கீழ் தனிநபர் கடன் ஆண்டிற்கு 6% வட்டி விகிதத்திலும் அதிகபட்ச கடனாக ரூ.20,00,000/மும், திட்டம் 2ன் கீழ் ஆண்களுக்கு 8% பெண்களுக்கு 6% வட்டி விகிதத்திலும் அதிகபட்ச கடனாக ரூ.30,00,000/– கடன் வழங்கப்படுகிறது.

கைவினை கலைஞர்களுக்கு ஆண்களுக்கு 5% பெண்களுக்கு 4% வட்டிவிகிதத்தில் அதிகபட்ச கடனாக ரூ.10,00,000/– கடன் வழங்கப்படுகிறது. சுயஉதவிக் குழுக் கடன் நபர் ஒருவருக்கு ரூ.1,00,000/ ஆண்டிற்கு 7% வட்டி விகிதத்தில் கடன் வழங்கப்படுகிறது. திட்டம் 2ன் கீழ் ஆண்களுக்கு 8% பெண்களுக்கு 6% வட்டி விகிதத்திலும் நபர் ஒருவருக்கு ரூ.1,50,000/ கடன் வழங்கப்படுகிறது. சிறுபான்மை மாணவ/ மாணவிகள் அரசால் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிலையங்களில் இளங்கலை/ முதுகலை தொழிற்கல்வி/ தொழில்நுட்பக்கல்வி பயில்பவர்களுக்கு அதிகபட்சமாக திட்டம் 1ன் கீழ் ரூ.20,00,000/– வரையில் 3% வட்டிவிகிதத்திலும், திட்டம் 2ன் கீழ் மாணவர்களுக்கு 8% மாணவிகளுக்கு 5% வட்டிவிகிதத்திலும் ரூ.30,00,000 வரையிலும் கல்வி கடனுதவி வழங்கப்படுகிறது.

கோவை மாவட்டத்தில் வசிக்கும் கிறித்தவ, இஸ்லாமிய, சீக்கிய, புத்த, பார்சிமற்றும் ஜெயின் ஆகிய சிறுபான்மையினர்கள் கடன் விண்ணப்பங்களை பெற்று அதனை பூர்த்தி செய்து உரிய ஆவணங்களுடன் சமர்ப்பிக்கலாம்.



> கைவினை கலைஞர்களுக்கு ஆண்களுக்கு 5% பெண்களுக்கு 4% வட்டிவிகிதத்தில் அதிகபட்சகடனாக ரூ.10,00,000 கடன் வழங்கப்படுகிறது. சுயஉதவிக் குழுக் கடன் நபர் ஒருவருக்கு ரூ.1,00,000/ ஆண்டிற்கு 7% வட்டி விகிதத்தில் கடன் வழங்கப்படுகிறது.

கடன் மனுக்களுடன் சார்ந்துள்ள மதத்திற்கான சான்று, ஆதார் அட்டை, வருமான சான்று, உணவு பங்கீடு அட்டை அல்லது இருப்பிடச் சான்று, கடன் பெறும் தொழில் குறித்த விவரம்/ திட்டஅறிக்கை, ஓட்டுநர் உரிமம் (போக்குவரத்து வாகனங்கள் கடன் பெறுவதற்காக இருந்தால் மட்டும்) மற்றும் கூட்டுறவு வங்கி கோரும் இதர ஆணவங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். கல்வி கடனுக்கு விண்ணப்பிக்கும் போது பள்ளி மாற்று சான்றிதழ், உண்மைச் சான்றிதழ் (Bonafide Certificate) கல்விக் கட்டணங்கள் செலுத்திய ரசீது /செலான் மற்றும் மதிப்பெண் சான்றிதழ் ஆகிய ஆவணங்களின் ஒளிப்பட நகல்களையும் சமர்பித்து விண்ணப்பிக்கலாம்.

இது குறித்து கூடுதல் விவரங்களுக்கு மாவட்டஆட்சியர் அலுவ லகத்தில் அமைந்துள்ள மாவட்ட சிறுபான்மையினர் நலஅலுவலக தொலைபேசி எண்.0422 2300404 மற்றும் மின்னஞ்சல் முகவரி dmwo.cbe@tn.gov.in <mailto:dmwo.cbe@tn.gov.in>ல் விவரம் பெற்றுக் கொள்ளலாம்.

இவ்வாறு மாவட்ட ஆட்சியர் கிராந்திகுமார் பாடி தெரிவித்துள்ளார்.



தூத்துக்குடி பாராளுமன்ற உறுப்பினர் கனிமொழி இந்திய தொல்லியல் துறை திருச்சி மண்டலத்தின் மூலம் ஏரல் வட்டம் திருக்கோளூர் கிராமத்தில் நடைபெறும் அகழாய்வு பணிகளில் கிடைக்கப்பெற்ற பொருட்களை பார்வையிட்டார். மாவட்ட கலெக்டர் செந்தில்ராஜ், தூத்துக்குடி மாநகராட்சி மேயர் ஜெகன், ஓட்டப்பிடாரம் சட்டமன்ற உறுப்பினர் சண்முகையா, திருச்சி மண்டல மத்திய தொல்லியல் துறை இயக்குநர் அருண் ராஜ் ஆகியோர் உடன் உள்ளனர்.

# பள்ளிகள் திட்டமிட்டப்படி ஜூன் 1ம் தேதி திறக்கப்படும்: அமைச்சர் அன்பில் மகேஷ்

சென்னை, மே 23

தமிழகத்தில் திட்டமிட்டப்படி ஜூன் 1 ஆம் தேதி பள்ளிகள் திறக்கப்படும் என பள்ளிக்கல்வி துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் உள்ள பள்ளிகளில் ஆண்டுத் தேர்வுகள் முடிவடைந்து, மாணவர்கள் கோடை விடுமுறையில் இருந்து வருகின்றனர். கோடை விடுமுறை முடிந்து 6 முதல் 12 ஆம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்கு ஜூன் 1 ஆம் தேதி பள்ளிகள் திறக்கப்படும் என அறிவிக்கப்பட்டது. அதேநேரம் 1 முதல் 5 ஆம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்கு ஜூன் 5 ஆம் தேதி பள்ளிகள் திறக்கும் என்று அறிவிக்கப்பட்டது.



இதனிடையே தமிழகத்தில் வெயிலின் தாக்கம் அதிகரித்து காணப்படுவதால், பள்ளிகள் திறப்பு தள்ளிப்போகுமா என மாணவர்களும் பெற்றோர்களும் எதிர்ப்பார்த்து காத்திருந்தனர்.

இந்தநிலையில், ஏற்கனவே அறிவிக்கப்பட்ட தேதிகளில் பள்ளிகள் நிச்சயம் திறக்கப்படும் என பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ் உறுதிபட தெரிவித்துள்ளார். இதனால், 6 முதல் 12 ஆம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்கு ஜூன் 1 ஆம் தேதியும், 1 முதல் 5 ஆம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்கு ஜூன் 5 ஆம் தேதியும் பள்ளிகள் திறக்கப்படும் என்பது உறுதியாகியுள்ளது.

இதனையடுத்து, பள்ளிகள் திறப்பிற்கான ஏற்பாடுகளும் பள்ளிக் கல்வித்துறை சார்பில் செய்யப்பட்டு வருகின்றன. அரசுப் பள்ளிகளில் படிக்கக் கூடிய மாணவர்களுக்கு விலையில்லா பாடப்புத்தகங்கள், நோட் புத்தகங்கள் உள்ளிட்ட பல வகையான பொருட்கள் வழங்குவதற்கான பணிகளும் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

# மேட்டுப்பாளையம் அருகே வனத் துறை ஊழியர்களைத் துரத்திய பாகுபலி யானை


## வீடியோ வெளியாகி பரபரப்பு

கோவை, மே 23

கோவை, மேட்டுப்பாளையம் அருகே சமயபுரம் பகுதியில் சாலையை கடக்க முயன்ற பாகுபலி யானை, வனத்துறையினரைக் கண்டதும் பிளிறிய படி துரத்தியது.

மேட்டுப்பாளையம் அருகே உள்ள சமயபுரம் பகுதி வனப்பகுதியை ஒட்டி அமைந்துள்ளது. இப்பகுதியில் சுமார் 400க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றன.

வனப்பகுதியை ஒட்டி உள்ள பகுதி என்பதால் உணவுக்காகவும், தண்ணீருக்காகவும் காட்டு யானை, காட்டெருமை, மான், உள்ளிட்ட பல்வேறு வகை வனவிலங்குகள் அவ்வப்போது ஊருக்குள் நுழைந்து பயிர்களை சேதம் செய்வதோடு, மனிதர்களையும் அச்சுறுத்தி வருகிறது. இந்நிலையில் கடந்த பல நாட்களாகவே பாகு பலி என்று அப்பகுதி மக்களால் செல்லமாக அழைக்கப்படும் ஒற்றைக் காட்டு யானையின் நடமாட்டம் அதிகமாகவே உள்ளது.



குறிப்பாக அதிகாலை வேளைகளில் வனப்பகுதியை விட்டு வெளியே வரும் பாகுபலி யானை சமயபுரம் பகுதியில் சாலையைக்கடந்து மறுபுறம் உள்ள விளைநிலங்களுக்குள் புகுந்து விடுகிறது.

இதைத் தொடர்ந்து மாலையில் விளை நிலங்களில் இருந்து மீண்டும் சமயபுரம் வழியாக சாலையைக்கடந்து வனப் பகுதிக்குள் சென்று விடுகிறது. குறிப்பாக இது வரை பாகுபலி யானை மனிதர்கள் எவரையும் தாக்கியது இல்லை என்றாலும், அப்பகுதியில் வசிக்கும் மக்கள் காலை – மாலை வேளைகளில் தங்களது வீடுகளை விட்டு வெளியே வரவே அச்சப்படுகின்றனர்.

மேலும் மேட்டுப்பாளையம் வனத்துறை சார்பில் பாகு பலி யானை சாலையினை கடக்கும் வேளைகளில் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர். அந்த வகையில் இன்று அதிகாலை சமயபுரம் பகுதியில் சாலை கடக்க முயன்ற யானை சாலையில் வனத்துறையினர் நிற்பதை கண்டதும் ஆவேசமடைந்து பிளிறியபடியே வனத்துறையினரை துரத்தியது.

இதனால், வனத்துறையினர் அச்சமடைந்து தெறித்து ஓடினர். பின்னர், சற்று நேரத்தில் யானை சாலையைக் கடந்து சென்றது. இதனால், அப்பகுதியில் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது.

# 2000 ரூபாய் நோட்டுகளுக்கு அரசு பேருந்தில் தடை இல்லை

சென்னை, மே 23

டிக்கெட் எடுக்க 2000 ரூபாய் நோட்டுகளுக்கு அரசு பேருந்தில் தடையில்லை என அரசு போக்குவரத்து கழகம் அறிவித்துள்ளது.

2000 ரூபாய் நோட்டுகளை மத்திய ரிசர்வ் வங்கி திரும்ப பெரும் அறிவிப்பை அண்மையில் வெளியிட்டது.

இதற்கான கால அவகாசம் வரும் செப்டம்பர் மாத இறுதி வரையில் நீட்டிக்கப்பட்டுள்ளது. அதற்குள் பொதுமக்கள் தங்களிடம் இருக்கும் 2000 ரூபாய் நோட்டுகளை வங்கிகளில் செலுத்த கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

இருந்தும், செப்டம்பர் 30 வரையில் 2000 ரூபாய் நோட்டுக்கான மதிப்பு குறையவில்லை. அது செல்லும் என்றே ரிசர்வ் வங்கி அறிவித்து இருந்தது. இந்நிலையில், அறிவிப்பு வந்தவுடன், தமிழக போக்குவரத்து கழகம், பொதுமக்களிடம் இருந்து டிக்கெட் எடுக்க, 2000 ரூபாய் நோட்டுகளை வாங்க வேண்டாம் என கூறியதாக தெரிகிறது.

இதனை அடுத்து, நேற்று தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் வெளியிட்ட அறிவிப்பில், பயணிகளிடம் இருந்து டிக்கெட் விற்பனைக்காக நடத்துனர்கள், புக்கிங் கவுன்டர்களில் 2000 ரூபாய் நோட்டுகளை வாங்கலாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.



கோவை மாவட்டம் கிணத்துக்கடவு ஊராட்சி ஒன்றியம், கோதவாடி ஊராட்சியில் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் அமைக்கப்பட்டிருந்த தமிழக அரசின் சாதனைகள் மற்றும் திட்டங்கள் குறித்த புகைப்பட கண்காட்சியினை ஏராளமான பொதுமக்கள் பார்வையிட்டனர்.

## தலையங்கம்

பிற்பகல்

# ரூ.2000 திரும்ப பெறுதலை கண்டுகொள்ளாத மக்கள்!

இந்திய ரிசர்வ் வங்கி 2000 ரூபாய் நோட்டை திரும்ப பெறுவதாக அறிவித்ததை அடுத்து வட இந்தியாவில் இருந்து தென்னிந்தியா வரை அரசியல் கட்சி பிரபலங்கள் மட்டுமே பாரதிய ஜனதா கட்சியின் மத்திய அரசுக்கு கடும் கண்டனத்தை தெரிவித்து வருகின்றனர். ஆனால் நாடு முழுவதும் பொதுமக்கள் இந்த அறிவிப்பை கண்டு கொள்ளவே இல்லை என்பதுதான் ஆச்சரியமான தகவலாகும்.

ஏழை எளிய மக்கள் மற்றும் நடுத்தர மக்கள் 2000 ரூபாய் நோட்டை பார்த்து பல மாதங்கள் ஆகி உள்ளது என்றும் பயன்படுத்தி பல வருடங் கள் ஆகின்றது என்பதும் குறிப்பிடத்தக்கது. பொதுமக்கள் மத்தியில் கிட்டத்தட்ட புழக்கத்தில் இல்லாத 2000 ரூபாய் நோட்டு செல்லாமல் போனால் என்ன? செல்லுபடி ஆனால் என்ன? என்ற எண்ணம் தான் பொதுமக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது.

ஆனால் கருப்பு பணத்தை பதுக்கி வரி கட்டாமல் கோடி கணக்கில் வைத்திருக்கும் அரசியல்வாதிகள், தொழிலதிபர்கள், பிரபலங்கள் தான் 2000 ரூபாய் நோட்டு திரும்பப்பெற்றது குறித்து அறிவிப்புக்கு பொங்கி எழுந்து வருகின்றனர். மத்திய அரசையும் பாரதிய ஜனதா கட்சியையும் பிரதமர் மோடியையும் அவர்கள் விமர்சனம் செய்து வருகின்றனர்.

மேலும் 2000 ரூபாய் நோட்டை மாற்றுவதற்கு பல்வேறு வகையில் இன்று முதல் இந்திய ரிசர்வ் வங்கி அனுமதி வழங்கி இருந்தாலும் 2000 ரூபாய் நோட்டை திரும்ப பெற வேண்டும் என்ற அறிவிப்பு கோடிக்கணக்கில் பதுக்கி வைத்துள்ள முதலைகளுக்கு பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. 30 ஆயிரம் கோடி 40,000 கோடி என பதுக்கி வைத்திருக்கும் பிரபலங்களுக்கு அந்த நோட்டை மாற்றுவது எப்படி என்ற வழி தெரியாமல் திணறி உள்ளனர்.

ஆட்சியில் இருக்கும் சில அதிகாரம் மிக்கவர்கள் 2000 ரூபாய் நோட்டை மாற்றுவதில் கரை கண்டவர்கள். ஆனால் ஆட்சியில் இல்லாத பிரபலங்கள், தொழிலதிபர்கள், திரையுலக பிரபலங்கள் 2000 ரூபாய் கருப்பு பணத்தை எப்படி மாற்றுவார்கள் என்பது மிகப்பெரிய கேள்விக்குறி தான்.

2000 ரூபாய் நோட்டை அச்சடிக்கும் போது இது ஒரு கோமாளித்தனமான முடிவு என்று அனைவரும் கூறினர். கருப்பு பணம் பெருக்குவதற்குத் தான் இது வழி வகுக்கும் என்றும் கூறப்பட்டது. ஆனால் கருப்பு பண முதலைகளை 2000 ரூபாய் நோட்டை பதுக்க வைத்து அதன் பின் தற்போது மீண்டும் 2000 ரூபாய் நோட்டை திரும்ப பெறுவதில் தான் மோடியின் ராஜதந்திரம் இருக்கிறது என்ன பாஜகவினர் தெரிவித்து வருகின்றனர்.

அதே நேரத்தில் 2000 ரூபாய் நோட்டு செல்லாமல் போய் விடும் என கடந்த ஓரிரு ஆண்டுகளாகவே பேச்சு அடிபடுகிறது. பிரபலங்கள் முன்னெச்சரிக்கையாக அந்த ரூபாய் நோட்டுகளை தவிர்த்து இருப்பார்கள் என்றும் பேசப்படுகிறது. ஏழை எளிய மக்கள் மற்றும் நடுத்தர மக்கள் தங்களிடம் இருக்கும் சில ஆயிரம் முதல் சில லட்சங்கள் வரையிலான 2000 ரூபாய் நோட்டுகளை மிக எளிதில் மாற்றிக் கொள்வார்கள்.

மொத்தத்தில் கடந்த முறை போல் இல்லாமல் ஏழை எளிய மற்றும் நடுத்தர மக்களுக்கு எந்தவித பிரச்சனையும் இல்லாமல் வெளி வந்திருக்கும் அறிவிப்பு தான் இந்த 2000 ரூபாய் நோட்டு திரும்பப்பெறும் அறிவிப்பு என்பது குறிப்பிடத்தக்கது!

# மாஸ்கோவில் யூரேசிய பொருளாதார மன்றக் கூட்டம்

கோவை, மே 23

மனித மூலதன மேம்பாடு, தொழில்நுட்ப ஒத்துழைப்பு, ஒருங்கிணைப்பு ஒத்துழைப்பு வடிவங்களின் எதிர்காலம் மற்றும் டிஜிட்டல் மாற்றத்தின் அம்சங்கள் ஆகியவை மே 24-25 தேதிகளில் மாஸ்கோவில் நடைபெறும் 2 வது யூரேசிய பொருளாதார மன்றத்தின் வணிக திட்டத்தில் விவாதிக்கப்பட உள்ளது.

நிகழ்ச்சியை ரோஸ் காங்கிரஸ் பவுண்டேஷன் நடத்துகிறது.

'யூரேசிய பொருளாதார மன்றம் ஈ.ஏ.இ.யு.வில் தொடர்புகளின் மிக முக்கியமான பகுதிகளை உள்ளடக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. மன்றத்தின் திட்டம் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு மற்றும் தொழில்துறை, சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் எரிசக்தி ஆகியவற்றில் கூட்டு அணுகுமுறைகளின் வளர்ச்சி, அத்துடன் தொழில்நுட்ப மற்றும் சுங்க ஒழுங்குமுறைகள் மற்றும் மாநிலங்களின் உள்நாட்டு சந்தையை ஒழுங்கமைத்தல் ஆகியவற்றின் சிக்கல்களை நிவர்த்தி செய்யும்.

மன்றத்தின் மற்றொரு முக்கியமான பணி வணிகம் மற்றும் அரசு நிறுவனங்களுக்கு இடையே தொடர்புகளை ஏற்படுத்துவதற்கான ஒரு தளத்தை உருவாக்குவதாகும்' என்றார் யூரேசிய பொருளாதார ஆணைய வாரியத்தின் தலைவர் மிகைல் மியாஸ்னிகோவிச்.

மன்றத்தின் கருப்பொருள் 'பல்துருவ உலகில் யூரேசிய ஒருங்கிணைப்பு' என்பதாகும்.

யூரேசிய பொருளாதார மன்றம் 2023க்குள் மொத்தம் 35 அமர்வுகளை நடத்த உள்ளது..

2023ம் ஆண்டில் யூரேசிய பொருளாதார ஒன்றியத்தின் அமைப்புகளில் ரஷ்ய கூட்டமைப்பின் தலைமைத்துவத்தின் ஒரு பகுதியாக 2வது யூரேசிய பொருளாதார மன்றம் மற்றும் உச்ச யூரேசிய பொருளாதார கவுன்சிலின் கூட்டம் ஆகியவை நடத்தப்படுகின்றன. மன்றத்தின் நோக்கம் யூரேசிய விண்வெளியில் ஒத்துழைப்பு உறவுகளை மேம்படுத்துவதாகும்.

ஸ்ரீ ராமகிருஷ்ணா மில்ஸ் (கோயமுத்தூர்) லிமிடெட்
CIN : L17111TZ1946PLC000175
பதிவு அலுவலகம் : எண்.1493, சத்தியமங்கலம் ரோடு, கணபதி அஞ்சல், கோயமுத்தூர் – 641006.
Website: www.ramakrishnamills.com
போன் : 0422–2531022, 2531122
அறிவிப்பு
பங்குச் சந்தை (பட்டியல் கடமைகள் மற்றும் வெளிப்படுத்தல் தேவைகள்) ஒழுங்குவிதிகள் 2015 (Listing Obligations & Disclosure Requirements) Regulations 2015. சரத்து 29, மற்றும் சரத்து 47–ன் படி, நாளது 30.05.2023 தேதி செவ்வாய்க்கிழமை, காலை 9.30 மணிக்கு வீடியோ கான்பரென்ஸ் மூலம் நிர்வாக அலுவலகம் அமைந்துள்ள, 15, நேதாஜி ரோடு, பாப்பநாயக்கன்பாளையம், கோயம்புத்தூர்–641037–ல் நடைபெறும் கம்பெனியின் நிர்வாக சபைக் கூட்டத்தில் 31.03.2023–ம் தேதியுடன் முடிவடைந்த கம்பெனியின் தணிக்கை செய்யப்பட்ட நான்காவது காலாண்டு மற்றும் முடிவடைந்த முழு ஆண்டுக்கான நிதி நிலைமையும் மற்ற சம்பந்தப்பட்ட விஷயங்களையும் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என அறிவிக்கப்படுகிறது.
மேலே குறிப்பிட்ட அறிவிப்பு கம்பெனியின் இணையதளத்திலும் www.ramakrishnamills.com மற்றும் பங்குச் சந்தையின் இணையதளத்திலும் www.bseindia.com தெரிவிக்கப்பட்டுள்ளது.
ஸ்ரீ ராமகிருஷ்ணா மில்ஸ் (கோயமுத்தூர்) லிமிடெட்டிற்காக.
(ஒப்பம்.) D.லஷ்மிநாராயணசாமி
நிர்வாக இயக்குநர்
கோயமுத்தூர்
22.05.2023